**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group- I Journal)** **Vol-18 No. 03 July-September2024**

# தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பார்வையற்றோர் கல்விநிலை

**ஆய்வாளர்**

பி.தீபாவதி

முனைவர் பட்ட ஆய்வாளர்,

பூ.சா.கோ கலைஅறிவியல் கல்லூரி,

கோவை-641014.

**நெறியாளர்**

முனைவர்.இரா.சுமதி

உதவி பேராசிரியர் (தமிழ்த்துறை)

பூ.சா.கோகலை அறிவியல் கல்லூரி.

கோவை-641014.

**ஆய்வுசுருக்கம்**

தேனி சீருடையானின் புதினத்தில் வெளிப்படும் பார்வையற்றோர் சமூகமானது எத்தகையது அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் எத்தகையது என்பதனை விளக்கிக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1970-களில் பார்வையற்றோர் சமூகமானது எப்படிபட்டதாய் இருந்தது? எத்தகைய சவால்கள் நிறைந்த சமூகமாய் இருந்தது? என்பதையும் இன்று 20-களில் சமூகமானது கல்வியில் எப்படியெல்லாம் வளர்ச்சி அடைந்துள்ளது பொதுமான வளர்ச்சி அடைந்துள்ளதா அல்லது அது போதிய அளவு வளரவில்லையா என்பதை ஆய்வின் நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரையானது அமைகின்றது.

**முன்னுரை:**

உலக இயக்கத்தின் உன்னத ஆற்றல் தான் மனித சக்தி. அந்த மனித சக்திக்கு இயற்கை கொடுத்தது தான் உயர் கொடை . இந்த பூமியல் பிறக்கும் ஒவ்வொரு உயிரும் தனது தாயின் வயிற்றில் கருவாகும் போது ஏற்படும் ஏதோ சில சிக்கல்களால் முழு சக்தியும் இல்லாமல் போன நிலையில் சில குறைகளுடன் இந்த பூமியில் பிறக்கின்றனர். உலகில் பிறந்த ஒவ்வொரு உயிருக்கும் ஏதோ ஒரு குறை இருக்கும். ஆனால் பிறருடன் ஒப்பிடும்போது உடலிலோ, புலன் அல்லது அறிவுத்திறனில் குறைபாடு உள்ளவர்களுக்கு "ஊனம்" என்ற சொல்லின் மூலமாக ஒரு பெயரைக் கொடுத்து அவர்களை மாற்றுத்திறனாளிகளாக நாம் இந்த சமூகத்தில் அவர்களை உலாவவிடுகிறோம். பிறப்பும் இறப்பும் எப்படி நமது கையில் இல்லையோ

ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September2024

அதேபோல்தான் பிறக்கும்போது அல்லது வாழும் காலத்தில் நிகழும் இந்த புலன் குறைபாடும். இப்படி இந்த உலகில் பிறந்த இவர்கள் சமூகத்தோடு ஒன்றி வாழ நடத்தும் போராட்டங்களும் சாதாரண மக்களைக் காட்டிலும் இதுபோன்ற ஊனமுற்றோர் சமூகத்தோடும் மக்களோடும் அவர்களை புரிந்து கொண்டு அவர்களோடு தங்களின் குறைகளையும் மறந்து ஒரு சாதாரண வாழ்க்கையினை நடந்த எடுக்கும் முயற்சிகளும் ஏராளம். உடலில் ஊனம் என்றால் அதனை நாம் கடந்து வந்துவிடலாம்.ஆனால் புலன் குறைபாடு என்றால் அதனைக் கொண்டு இந்த மனித வாழ்க்கையை புரிந்து கொள்ளுவது என்பது சிக்கலாகிவிடும். அதிலும் பார்வைமாற்றுத்திறனாளிகள் எனில் இன்னும் அவர்களின் வாழ்க்கை சிக்கலாகிவிடுகின்றது.அப்படி அவர்களுள் ஒருவராக வாழ்ந்த 'தேனி சீருடையான்' தன்னுடைய புதினத்தில் பார்வைமாற்றுத்திறனாளிகளின் வாழ்வு, வறுமை மற்றும் கல்வி எத்தகைய சவால்கள் நிறைந்தது என்பதனை எடுத்தியம்புவதாக இவ்வியல் அமைகின்றது.

**ஊனம்/ஊனநிலை:**

சமூகத்தில் தனிமனித சிதைவு என்று முக்கியமாகக் கருதப்படுவது உடல் ,உள நோய்களைப் போன்ற மற்றொரு சிக்கல்தான் ஊன நிலை ஆகும். ஊன நிலை என்பது தனிமனிதனை சமூகத்திலும் குடும்பத்திலும் நேர்த்தியாக வாழ இடையூறு செய்யும் நிலை எனலாம். ஊன நிலையில் , குழவிப்பருவ ஊனம், சமூக உறுப்பினராக வளர்தல் , கல்வி நிலை போன்ற தளங்களிலும்,இடை வயது ஊனம் ஏற்படும் ஊனம் வேலைவாய்ப்பு,மற்றும் பணியமர்தல் போன்ற தளங்களிலும், பின்பருவ மூப்பின் ஊனம் பாதுகாப்பு மற்றும் உடல் நிலை போன்ற தளங்களில் இந்த ஊன நிலையானது சுட்டப்படுகின்றது.

ஊன நிலையைத் தனிமனித ஊனம் மற்றும் சமூகப் பார்வையில் ஊனம் என இரண்டாகப் பிரிக்கலாம். தனிமனித ஊனம் என்பது உடல் மற்றும் உளம் சார்ந்தது. சமூகத்தில் இயல்பான வாழ்க்கை வாழ தகுதியற்றோர், அநாதை,பிச்சைக்காரர்கள், வேலையற்றோர்,கல்வியறிவு பெறாதோர்,வறுமைக் கோட்டிற்கும் கீழான ஏழைகள், மணமாகாத குழந்தைகளைப் பெற்ற தாய்மார்கள் மற்றும் கைவிடப்பட்டோர் ஆகிய பலரும் சமுதாயத்துக்கு சுமையாக அமைவதால் இவர்களெல்லாம் சமூகப் பார்வையில் ஊனராகிவிடுகின்றனர் என்று அன்னிதாமசு கூறுகின்றார்.

ஊன நிலை என்று குறிப்பிடப்பட்ட இரண்டு பகுப்புகளையும் தேனி சீருடையான் தனது புதினங்களில் குறிப்பிட்டுள்ளார். முதலில் தனிமனித ஊனம் என்ற புலன் குறைப்பாட்டினை "நிறங்களின் உலகம்" என்ற புதினத்தில்

**"இங்க பாரு உன் மகன் ஆளுக மேல முட்டி மோதில்லிட்டு வாறான்" (நிறங்களின் உலகம்:ப.எண்:12)**

என்று பணியாரம் சுடும் பெண் பாண்டியின் தாயிடம் கூற அதற்கு பாண்டி தனது பார்வை

 ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September2024

குறைந்து தெரியாமல் போனதை கூறுகிறான் . இதனை இடைநிலை ஊனம் எனலாம்.

**"இந்த குடும்பத்தின் வறுமை விரட்டியாய் நான் ஆகக்போவது**

**எப்போது என்ற கேள்வி என் ஆன்மாவைக் கீறிப் பிளந்தது"(நிறங்களின் உலகம் :ப:எண்:249)**

என்ற இந்த வரிகளின் மூலம் தனது குடும்ப வறுமை எப்படியாவது போக்கி விட வேண்டும் என்று எண்ணும் பாண்டியின் நிலையினால் இரண்டாவது பகுப்பான சமூகத்தில் ஊனம் என்ற பிரிவின் கீழ்க்காணப்படும் வறுமையும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.தொடக்கத்திலேயே இதுபோன்ற குறைப்பாட்டு நிலை காணப்பாடால் அது ஊனமாக மாறுவதற்கு முன் தடுக்கவோ தவிர்க்கவோபட்டிருக்கலாம்.

**ஊனக்குறியீடு காரணங்களும்:**

மண்ணில் ஒரு குழந்தை ஊனமாகப் பிறக்கிறது என்றால் அது முழுக்க முழுக்க பெற்றோரையே சாரும் எனலாம். ஒரு தாய் கருவுற்ற காலத்தில் நோய் தாக்குதல்களுக்கு ஆளானால் அது குழந்தையை பாதிக்கும்.

1.சின்னம்மை போன்ற தொற்று நோய் வகை குழந்தையின் மூளையைப் பாதிக்கும்.கருவுற்று முதல் மூன்று மாதத்திற்குள் தாய்க்குத் தட்டம்மை ஏற்பட்டால் குழந்தையின் காதுகளைப் பாதிக்கின்றன.

2. குருட்டு நிலை மிகக் குறைந்த பார்வை,கண்புரை,விழித்திரை நோய் போன்ற கண் தொடர்பான பல பாதிப்புகள் தாய் கருவுற்று சில காலத்திற்குப்பின் நோயுற்றால் ஏற்படும். இதே பருவத்தில் இதய நோயும் உண்டாக வாய்ப்புகள் உண்டு.

3. கேள்வித்திறன் பாதிப்பு போன்ற ஊன நிலை தாய் கருவுற்ற மூன்றாம் மாதத்தில் மஞ்சள் காமாலைப் பாதிப்பு அமைவதன் மூலம் ஏற்படும்.

4. சத்தில்லாத உணவு,வைட்டமின் பி குறைவுபட்ட சமசீரில்லாத உணவு என்பனவும் குழந்தையின் வளர்ச்சி நிலைக்கு தடையாக அமைகின்றது.

5. கருவுற்ற காலத்தில் புகை பிடிப்பது மற்றும் கதிரியக்க முறைகளைக் கையாளுவதும் தவிர்க்கப்பட வேண்டியவை ஆகும்.

6. பெற்றோரிடமிருந்து குழந்தைகட்கு ஏற்படும் ஊனமானது மரபு சார்ந்தும் ஏற்படலாம். பெற்றோரின் செவி புலன் குறை மற்றும் பேச்சின்மையும் குழந்தைகளுக்கு வந்தால் அதனை மரபூனம் எனலாம்.

சில கண் பார்வை சார்ந்த நோய்களும் மற்றும் சர்க்கரை வியாதி போன்றவைகளும் இவ்வாறு வரலாம். சிதைவுற்ற மரபணு[Aberrated Gene] காரணமாகக் குழந்தைகள் ஊனமாகப் பிறக்கும் நிலை உண்டு.குறிப்பிட்ட பொருளாதார வகுப்பினர் என்றில்லாமல் எல்லா நிலையிலும் உள்ள குழந்தைகளுக்கு ஊனம் காணப்படுகின்றது.

இதனை நாம் தேனி சீருடையானின் "**நிறங்களின் உலகம்**" என்ற புதினத்தில் இடம் பெறும்

ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September2024

பூவிருந்தமல்லி பார்வையற்றோர் பள்ளியின் மாணவர்கள் மூலம் அறியலாம்.

**"தீபாவளி பக்கத்து ஊர் மாணவர்கள் எல்லாம் சொந்தம் கொண்டாடப் போய்விட்டார்கள்.**

**வெளியூர்வாசிகளுக்கு வீட்டிலிருந்து நிறையப் பணம் வந்தது.**

**குறைந்தபட்சம் பத்து ரூபாய் சென்னியப்பன், பாலகிருஷ்ணன் போன்ற பணக்கார மாணவர்களுக்கு நூறு ரூபாய் வரை வந்தது.என்னிடம் நூறு ரூபாய் இருந்தால் ஒரு வருடச்செல்வை ஈடுகட்டும்.அதே நூறு ரூபாய் அம்மாவுக்கு கிடைத்தால் ஒரு மாதக் குடும்பச்செலவுக்குப் போக அஞ்சு பத்து மிச்சம் வைத்திருப்பார்."**

**"(நிறங்களின் உலகம் :ப:எண்:251)**

மேற்கண்ட நிகழ்வின் மூலம் வசதி படைத்த சென்னியப்பனுக்கும் வசதியில்லாத பாண்டிக்கும் ஒரே மாதிரியான பார்வையற்ற நிலை காணப்படுகின்றது. எனவே இந்நோய் பொருளாதாரத்தின் அடிப்படையைக் கொண்டு வருவதில்லை என்பது நன்கு புலப்படுகிறது.

இப்படிப்பட்ட ஊனத்தை இவர்கள் எப்படி பார்க்கின்றார்கள் என பாரதிதாசன் தனது கவிதையில்,

**"ஓரி போலப் பதுங்கும் படித்தவர்**

**ஊனம் நொள்ளை செவிடென்று சொல்லுவேன்"**

என்று ஊன நிலையினை குறிப்பாக பார்வையற்றோரை 'நொள்ளை' என்ற பழிப்பு சொல்லின் மூலம் குறிப்பிடுகிறார். இதனால் ஊனச்சொற்களை குறிப்பிடும்போது அது இழிப்புப் பொருண்மையில் அமைந்து விடுகின்றது.

தமிழ்லெக்சிகன் குறைவு,பழி,தீமை,அழிவு போன்ற பொருண்மைகளை ஊனம் என்ற சொல்லுக்குப் பொருளாக தருகிறார் என்கிறார் அன்னிதாமசு (சமூகத்திலும் இலக்கியத்திலும் ஊனமுற்றோர்).இந்த சொற்கள் எல்லாம் "உடற்குறை" என்ற அடிப்படை பொருண்மையை விட பிற பொருண்மையையே அதிகம் காட்டுகின்றது.சான்றாக அறநூல்களில் அமையும் **குறை** என்ற பொருள் **"ஊனம் ஒன்று இன்றி"(இனியவை13)** என்ற சொல்லுக்கும் **"குற்றம்"** என்றால் அது **"ஊனம் பிறரை உரையான்"(ஏலாதி32)** எனும் பொருண்மையில் நமக்கு கிடைத்துள்ளது. இதனால் இழிப்பு பொருண்மையில் மட்டும் குறிப்பிடப்படாமல் பிறரின் தவறை சுட்டிக்காட்டவும் குறியீடாக ஊனச்சொற்கள் பயன்படுகின்றனர்.

"ஊனம்" என்ற சொல் பொது பொருண்மை என்ற அடிப்படையில் காணும்பொழுது ஒருவரின் அழிவு ,கேடு,குறை எனும் பொருண்மையின் கீழ் அமைகின்றது. இதனை,

**"ஏத்த வல்லார்க்கு இல்லை ஓர் ஊனமே**

**ஊனாமில் செல்வம் என்கோ ஊனமில் சுவர்க்கம் என்கோ**

**ஊனமில் மோக்கம் என்கோ ஒளிமணி வண்ணனையே"(திவ்யப்பிரபந்தம்3052)**

மேற்கண்ட வரிகளின் மூலம் அழிவு இல்லாத செல்வம்,கேடு இல்லாத சொர்க்கமும்,

ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September2024

குறையில்லாத மோட்சமும் அளிக்கவல்ல என்னுடைய தெய்வமே என்று நம்மாழ்வாரின் அழிவு, கேடு,குறை போன்ற சொற்களுக்கு பொதுபொருண்மையில் "ஊனம்" என்ற சொல்லைப் பயன்படுத்தி இருப்பது தெரிகிறது.

**பார்வையற்றோரும் சமூகமும்:**

சமூகம் என்றாலே ஒரு குறிப்பிட்ட வகையான மக்களைப் பற்றியது எனலாம்.சமூகம்,வாழும் அனைத்து விதமான மக்களுக்குள் ஏதோ ஒரு குறைப்பாடு இருக்கும்.ஆனால் அக்குறைப்பாடு அதிகரிக்கும் போதுதான் சாதாரன மனிதனின் தோற்றத்திலிருந்து அவன் வேறுபடும் போதும் அவனை நாம் மாற்றுத்திறனாளி என்ற பெயரினைக் கொடுத்து அத்தகையோர் வாழும் சமூகத்தில் இணைத்துவிடுகிறோம். அதிலும் பார்வைமாற்றுத்திறனாளிகள் குறிப்பிடத்தக்கவர்கள் ஏனென்றால் காது கேட்கவில்லை, வாய் பேசமுடியவில்லை அல்லது கை மற்றும் கால்கள் செயல்படவில்லை என்றாலும் நாம் ஒன்றைக் கண்டு உணர்ந்து அதனை அப்படியே செய்யலாம்.ஆனால் பார்வைமாற்றுத்திறனாளிகளுக்கு அப்படியில்லை ஒரு பொருள் எப்படி இருக்கும் என்ன செய்யும் நாம் அதனை எவ்வாறு கையாள வேண்டும் என்பதனை எல்லாம் அவர்கள் முதலில் உணர்வால் தானே ஒரு வகையான கற்பனைக் கொண்டு அதனை கற்று செய்ய வேண்டும்.மேலும் எப்படியாவது இந்த சமூகத்தில் முன்னேறி சக மனிதர்கள் செய்யக்கூடிய அனைத்து செயல்களையும் அவர்களுக்கு இணையாக செய்துக் காட்ட முடியுமென்ற தன்னம்பிக்கை கொண்டவர்கள்.

ஆனால் 90'களில் இவர்களுக்கென்ற ஓர் அங்கிகாரம் கிடைக்காமல் எத்தனை திறமைகள் இருந்தும் அதனை வெளிக்காட்ட நல்ல மேடை கிடைக்காமல் அனைவராலும் ஒரு பரிதாபத்திற்குரிய பொருளாக பார்க்கப்பட்டனர்.கண்ணிருக்கும் மனிதனாலேயே முன்னேற வழிகிடைக்காமல் தவிக்கிறான். கண்ணில்லாமல் இவர்களால் என்ன செய்ய இயலும் என்று நினைத்த காலகட்டமது.அக்காலக்கட்டதிலிருந்து தொடர்ந்த இவர்களின் போராட்டமானது 1955-ல் தான் இவர்களுக்கான **"சம வாய்ப்பு உரிமைப் பாதுகாப்பு-சமூகத்தில் முழுப் பங்கெடுப்பு"** என்னும் சட்டம் இயற்றப்பட்டு ஏழு வகையான பிரிவினைச் சார்ந்தோரை மாற்றுத்திறனாளிகள் என்று கூறிய சட்டம் பின்னர் இருபத்தொரு வகையான குறைபாடுடையவரை மாற்றுத்திறனாளிகள் என்று கூறினர்.இருந்தும் இன்னும் இவர்களைப் பலரும் கேலிப் பொருளாகவும் பரிதாபத்திற்குரிய பொருளாகவும் விளிம்பு நிலை மக்களின் நிலையிலும் வைத்துப் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றனர்.இதனையே தேனி சீருடையானின் **"சிறகுகள் முறியவில்லை"** என்ற புதினத்தில் அக்கதையின் நாயகனின் தாயார்,

**"கண்ணு அவிஞ்சுபோன அந்த வயசுலயே ஆஸ்பத்திரிக்குப்**
**போயிருந்தா இன்னேரம் இவன் பெரிய சம்பாத்தியக்காரனா ஆயிருப்பான்"( சிறகுகள்**

**முறியவில்லை ப:157)**

என்று கண் பார்வையில்லாததால்தான் தனது மகனும் குடும்பமும் முன்னேற முடியவில்லை என்று வருத்தப்படுவார். அக்காலத்தைப் பொறுத்தவரை கண் இருக்கும் மனிதனால் மட்டுமே முன்னேற முடியும் என்று நினைத்தனர். அவர்களுக்கு ஹெலன் கெல்லரைப் போல கண் பார்வையில்லாத பலரும் சாதித்த செய்தி அறியாத மக்கள் அவர்கள்.ஆனால் இன்று 20'களில் பல நல்ல மாற்றங்களை ஏற்றுக் கொண்டு பார்வைமாற்றுத்திறனாளிகள் தங்களின் வாழ்க்கையில் பிறரின் உதவியில்லாமல் தானகவே செயல்பட தொடங்கிவிட்டனர்.இன்று இந்த நிலையை அடைய அவர்களி தங்களின் குடும்பத்திலும்,கல்வியிலும்,வேலையில் சேர்வதிலும் எவ்வளவு இன்னல்களையும் தடைகளையும் கடக்க வேண்டியிருந்தது என்பதனை பின்வரும் தலைப்புகளின் வழி சிறிது அறிந்து கொள்ளலாம்.சமூகத்தில் தரமாக வாழ அத்தனை தகுதி இருந்தும் வெறும் உறுப்புக்குறையை மட்டுமே வைத்து இவர்களைப் போன்ற பார்வைமாற்றுத்திறனாளிகளை முன்னேற விடாமல் செய்து அவர்கள் ஓரளவு முன்னேற ஒரு நூறாண்டு காலமே தேவைப்பட்டிருக்கிறது.90'களில் ஆரம்பித்த இவர்களின் போராட்டம் 20'களில் ஓரளவு முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

**பார்வையற்றோரின் கல்விநிலை:**

அடிப்படையான அன்றாட வேலைகளையெல்லாம் பார்வையற்ற குழந்தைகள் தங்களின் பெற்றோரின் மூலம் அறிந்துக் கொள்கின்றரன்.அவர்கள் அடுத்தபடியாக தங்களின் வாழ்வில் உயர அவசியமாக தேவைப்படுவது கல்வி.அதனை கொண்டே அவர்கள் தங்களின் வாழ்வினை அடுத்த நிலைக்கு கொண்டு செல்ல இயலும்.கல்வி என்பது அனைவருக்கும் தேவையான ஒன்று அதிலும் பார்வையற்ற குழந்தகளுக்கு இன்னும் ஒருபடி மேல் சென்று மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.ஏனென்றால் கல்வி ஒன்றே அவர்களை தன்னிச்சையாக வாழ உதவி செய்கின்றது.தன்னபிக்கை கொடுத்து சக மனிதர்களைப் போல நாமும் இந்த சமூகத்தில் அனைவரிடத்தும் ஒன்றுப்பட்டு வாழ கல்வி மிக முக்கிய பங்கு வகிக்கின்றது.கல்வியில் உயருபவனே வாழ்விலும் உயரமுடியும்.எனவே இந்த சமூகத்தில் நாம் பிறருக்கு பாரமாக இருக்க முடியாமல் செய்யும் ஒரே கருவியாக கல்வி உள்ளது.பார்வையுடைய குழந்தைக்களுக்கு கல்வியறிவு எவ்வளவு முக்கியமோ அதனைவிட ஆயிரம் மடங்கு பார்வையற்ற குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வி. சாதாரண மனிதன் கல்வியறிவு இல்லையென்றாலும் ஏதோ ஒரு வேலை செய்து பிழைத்துக் கொள்ளலாம்.ஆனால் பார்வையற்றோருக்கு அதைப்போல எல்லா வேலைகளையும் செய்து பிழைக்க இயலாது.கல்வி ஒன்றே அவர்களின் வாழ்வினை மேம்படுத்தி அவர்களையும் பிற மனிதர்களைப் போல காணச் செய்யும்.ஆனால் பல பெற்றோர்களுக்கு இதனைப் பற்றிய விழிப்புணர்வு கிடையாது.60-களிளெல்லாம் இவர்களைப் போன்றவர்களுக்கு எதற்கு கல்வி அது இவர்களுக்கு எந்த

ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September2024

வகையில் பயன்படும் என்பதை யாரும் எண்ணி பார்க்கவில்லை.மேலும் நூற்றில் தொண்ணூறு சதவீத பார்வையற்ற குழந்தைகள் பிறக்கும் குடும்பங்கள் வறுமை கோட்டிற்கும் கீழானவர்களாகதான் இருக்கின்றனர்.பணம் கொடுத்து செலவு செய்து படிக்க வைக்கும் வசதி படைத்தவர்களாக பெரும்பாலும் அவர்கள் இல்லை.எனவே இவர்களுக்கான கல்வி பற்றிய அடிப்படை புரிதல் இல்லாதவர்களாக பெற்றோர்கள் இருந்தனர்.

**பார்வையற்றோர் பள்ளி:**

சுதந்திரத்திற்கு முன்பு இருந்த காலகட்டத்தில் பெரும்பான்மையானோர் ஆங்கில வழி கல்விபயின்று வந்தனர்.ஏழை பெற்றோர்களுக்கு அக்கல்வியை தங்களின் குழந்தைகளுக்கு அறிவு இருந்தும் பணம் இல்லாததால் குழந்தைகளுக்கு வழங்க முடியவில்லை அதிலும் பார்வையற்றோரின் பெற்றோர்களுக்கு இன்னும் கூடுதல் பாரம் ஏனென்றால் அவர்களின் நினைப்பு இவர்களால் தன்னிச்சையாக செயல்பட இயலாது.ஒரு மூலையில் முடங்கி அமைதியாக இருப்பது சிறப்பு என்று.ஆனால் சாதாரண குழந்தைகளை போன்று பார்வையற்ற குழந்தைகளும் வாழ்வில் முன்னேற வேண்டும் என்று ஆங்கிலேயரின் காலத்திலேயே ராணி விக்டோரியாவின் நினைவாக சென்னையிலுள்ள பூவிருந்தமல்லியில் பூந்தமல்லி பார்வையற்றோர் பள்ளி என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் அமைக்கப்பட்டது.இந்தியாவின் மிகப் பழமையான பார்வையற்றோர் பள்ளி இதுவே ஆகும்.1931-ஆம் ஆண்டில் இப்பள்ளி தொடங்குவதற்கான யோசனையை முன்வைத்து அடிக்கோட்டிட்டவர் ஏரிக்கான்ரன்.ஆசியா கண்டத்தின் முதல் பார்வையற்றோர் உயர்நிலைப் பள்ளியாக செயல்படத் தொடங்கியது.முதலில் ஆண்மாணவர்களாக தொடங்கப்பட்ட இப்பள்ளி பின்னர் பெண் பிள்ளைகளின் முன்னேற்றத்தை கருதி இருபாலினரும் கல்வி பயிலும் இடமாக மாறியது.இது அரசு உதவி பெறும் பள்ளி என்பதால் பெரும்பாலும் தங்கும் விடுதியிலிருந்து உண்ணும் உணவு படிக்கும் புத்தகம் என அனைத்தையும் இலவசமாகவே வழங்கப்பட்டது.பெரும்பாலான மாணவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.இது போன்ற பள்ளி பற்றிய விழிப்புணர்வு இல்லாமலேயே பல பெற்றோர்கள் இருக்கும் நிலையில் இதனைப் பற்றி அறிந்த சிலர் தங்களால்தான் குழந்தைகளுக்கு மூன்று வேளையும் உணவளிக்க முடியவில்லை.இதுபோன்ற பார்வையற்ற குழந்தைகளுக்கு எப்படி வழிநடத்துதல் என்று தெரியவில்லை. ஆனால் இவை அனைத்தையும் செய்ய ஒரு பள்ளி அமைப்பட்டிருக்கின்றது.அதுவும் அங்கு முழுவதும் இலவசம் என்று தெரிந்து நிறைய பலவேறு பொருளாதாரத்தை சேர்ந்த பார்வையற்ற குழந்தைகள் இப்பள்ளியில் கொண்டு வந்து சேர்க்கின்றனர். இப்பள்ளியில் சேர்க்க வெறும் பார்வையற்றறோர் என்ற தகுதி ஒன்றே பொதுமானது வேறு எந்தவித தகுதியோ நிலையோ தேவையில்லை நல்ல உணவு,பாதுகாப்பு.இதோடு இணைந்து கல்வி,தொழில் மற்றும் தனிச்சையாக இயங்கும்

ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September2024

தன்மை என அனைத்தையும் இப்பள்ளியே மாணவர்களுக்கு வழங்கிவிடும்.இப்பள்ளியினை முன்னோடியாக கொண்டு இன்று பல ஊர்களில் சில பள்ளிகள் தொடங்கி நன்றாக செயல்பட்டு வருகின்றது.

**கே.கே.பள்ளி:**

1928-ல் மகாராஜா ஸ்ரீ கிருஷ்ணகுமார்சின்ஹ்ஜி,மும்பையில் உள்ள பார்வையற்றோருக்கான விக்டோரியா நினைவுப் பள்ளிக்குச் சென்றபோது,அங்கு பாவ்நகர் மாநிலத்தின் உம்ராலா கிராமத்தைச் சேர்ந்த நட்டு டோலட் ஓசா என்ற பார்வையற்ற மாணவருடன் தொடர்பு ஏற்படுகிறது.மகாராஜா அவரிடம் ஏன் மும்பையில் இருக்கிறாய்? உங்கள் ஊரில் அல்லது அருகிலுள்ள எந்த மாநிலத்திலும் பார்வையற்றோருக்கான பள்ளிகள் எதுவும் இல்லையா என்று கேட்க.அதற்கு ஓசா இல்லை என்று அப்பாவித்தனமாக தனது பதிலை அளித்தார்.அதனால் ஈர்க்கப்பட்ட மகாராஜா.பாவ்நகரில் பார்வையற்றோர் பள்ளியை நிறுவ முடிவு செய்து அதற்கான ஒரு குழுவை அமைத்து சரியான முறையில் திட்டத்தை அமைத்தார்.பாவ்நகர் மாநிலத்திலிருந்து மானியத்தை ஒதுக்க முடிவு செய்து கே.கே.பள்ளி மற்றும் பார்வையற்றோர் இல்லத்தை ஜனவரி,1932-இல் நிறுவினார்.

**விக்டோரியா நினைவுபள்ளி:**

கே.கே.பள்ளிக்கு முன்னோடியாக இருந்த விக்டோரியா நினைவு பள்ளி 1902-இல் நிறுவப்பட்டது.முழுமையான கல்வி,திறன் மேம்பாடு மற்றும் சுபாதிகாரம் ஆகியவற்றின் மூலம் பார்வையற்ற சிறுவர்களுக்கு பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்க அர்ப்பணிக்கப்பட்ட நிறுவனம் ஆகும்.இங்கு எட்டாம் வகுப்புவரை இலவச கல்வியினை வழங்குகின்றனர்.மேலும் தொழில் சார்ந்த பயிற்சி ,இசை,கைவினைப்பொருட்கள் மற்றும் விளையாட்டுகளில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.இது போன்று 1902-இல் தொடங்கிய பார்வையற்றோருக்கான கல்வி பல தடைகளை தாண்டி இன்று 21-ஆம் நூற்றாண்டில் நிறைய அரசு உதவி பெறும் பள்ளிகளின் மூலம் வழங்கப்படுகின்றது.சிறப்புப்பள்ளிகள் மட்டுமின்றி அனைத்துவித குழந்தைகள் படிக்கும் பள்ளியிலும் இவர்களுக்கென தனி வகுப்புகள் அமைத்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

**தங்கும் விடுதிகளின் அமைப்பு:**

கல்வி மட்டும் வழங்கினால் அது சிறப்பாகுமா? ஆகாது ஏனென்றால் கல்வி வழங்கும் இடம் அருகில் இருந்தால் அந்த இடத்தை சுற்றியுள்ளவர்களுக்கு மட்டுமே அந்த கல்வியானது வழங்கப்படும்.வேறு ஊரிலோ வேறு நகரத்திலோ உள்ளவர்களுக்கோ இந்த கல்வியானது கிடைக்காமல் போவதற்கு நிறைய வாய்ப்புகள் உண்டு.மேலும் அனைவராலும் செலவு செய்து தொலைவில் அனுப்ப போதுமான வசதிகள் இருக்காது.எனவே பள்ளியினுள்ளே தங்கிப் படிக்கவும் சக மனிதர்களுடன் சகஜமாக பழகவும் மேலும் தங்களின் அன்றாட வேலைகளை தங்களே பிறரின் துணையின்றி எப்படி செய்ய வேண்டும் போன்ற பயிற்சியினை அளிக்க

விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கும்.இங்கு தங்கவும் உண்ணவும் எந்தவித பணமோ காசோ தேவையில்லை மாணவர்களுக்கு முற்றிலும் இலவசம். மேலும் பள்ளியில் சேர விண்ணப்பித்து தெரிவு செய்யப்பட்டு பள்ளியில் சேரும் மாணவர்களின் வழி செலவுக் கூட கால்வாசி செலவு செய்தால் போது,.இதனை நாம் **"நிறங்களின் உலகத்தில்"**

**"தோ பாருங்க; சர்க்காரு ஸ்கூல்னு போட்டிருக்கு;குடிக்யக் கஞ்சி**
**தங்க எடம்;வருஷத்துக்கு ரெண்டு ஜோடி உடுப்பு எல்லாமே எலவசம்னு**
**போட்டிருக்கு;ரயில் பிரயாணத்துக்குக் காவாசி டிக்கட் எடுத்தால் போதுமாம்;**
**கூடத் தொணக்கிப் போறவருக்கும் கால் டிக்கட்டுத்தான்"(நிறங்களின் உலகம்:31)**

தெரிந்துக் கொள்ள முடிகின்றது.விடுதியில் சேர்த்தபின் அங்கு எல்லாரையும் பார்த்துக்கொள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மூன்று நான்கு அக்காமார்கள் இருந்தனர்.இவர்கள் ஐந்தாம் வகுப்புக்கும் குறைவாக உள்ள மாணவர்களை பார்த்துக் கொள்ள நியமிக்கப்பட்டவர்கள்.அதற்கு மேல் அவர்களாகவே எல்லாவற்றையும் செய்ய கற்று கொள்ளுவர். விடுதியில் காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து காலைகடன்களை முடித்துவிட்டு பின் ஏழு மணிக்குள் குளியலை முடித்திருக்க வேண்டும். முதலில் பெண்பிள்ளைகளும் இரண்டாவது ஆண்பிள்ளைகளுமாக தங்களின் கடமைகளை முடித்துவிட்டு அவரவர் தூண்டினால்தான் துடைத்துக் கொள்ள வேண்டும். குளியலை முடித்துவிட்டு ஏழரை மணிக்கு சாப்பிடும் அறைக்கு சென்றிருக்க வேண்டும்.

**உணவு:**

உணவு என்பது எவ்வளவு முக்கியமான ஒன்று என்பதை அனைத்து வகையான அறிவுடைய உயிர்களும் நன்கு அறியும்.உணவு இல்லாமல் ஒருவரின் கல்வியறிவானது நின்றுவிடக் கூடாது என்பதாலும் உணவிற்கே வழியில்லாமல் இருக்கும் குழந்தைகளுக்கு இரட்டிப்பு வலிமையளிக்கவும் காமராசரால் கொண்டு வரப்பட்டதே மதிய உணவுத்திட்டம் அதனால் குழந்தைகளுக்கு வயிறும் நிறையும் அறியும் வளரும் அதன்பின் அது படிப்படியாக வளர்ந்து இன்று இருபத்தோராம் நூற்றாண்டில் காலை உணவுத்திட்டம் வரை வளர்ந்துள்ளது.இதே போல் தனது குழந்தைக்கு கல்வி அறிவு கிடைக்கிறதோ இல்லையோ ஆனால் அவனுக்கு நல்ல உணவும் பாதுகாப்பும் கிடைக்கும் என்று நம்பி குழந்தைகளை இது போன்ற பள்ளிகளுக்கு பெற்றோர்கள் அனுப்புகின்றனர்.அந்த நம்பிக்கையை இவர்கள் ஒருபோதும் கெட்டு போகும்படி செய்யவில்லை.இது போன்ற பள்ளிக்கு வந்துதான் பெரும்பான்மையான குழந்தைகள் நிறைய நல்ல உணவையும் நேரத்திற்கு கிடைக்கும் வயிறு நிறைய உணவையும் உண்ணுகின்றனர்.

**"வயிறு நிறைந்த போது வருத்தம் மனசைக் கவ்வியது.**
**அக்காவுக்கும் அம்மாவுக்கும் இதெல்லாம் கிடைக்கப் போவதில்லை.**

ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September2024

**அவர்களுடன் இருந்து வாழ்ந்து பசியைப் பகிர்ந்து கொண்ட எனக்கு**
**மட்டும் ஏற்றம் கிடைப்பது எப்படி நியாயமாகும்?"(நிறங்களின் உலகம்:100)**

ஆனாலும் குழந்தைகளின் மனநிலை அவர்களின் குடும்ப நிலையை எண்ணி வருத்தப்படுகின்றது.பாண்டி விடுதிக்கு சென்ற முதல்நாள் அவன் சாப்பிட்ட கைக்குத்தல் அரிசியும் சேப்பங்கிழங்குச் சாம்பாரும் ருசியாக இருக்கவில்லை என்றாலும் இந்த உணவாவது நமக்கு கிடைக்கின்றதே இதுகூட கிடைக்காத தனது அக்காவையும் அம்மாவையும் எண்ணி கவலைப்படுகிறான்.

காலையில் உப்புமாவும் நிலக்கடலைப் பருப்பும் காப்பியும் மதியத்துக்கு அரிசி சோறும் இரவில் ஏதேனும் ஒருவகை கூழ் கிடைக்கும்.சுதந்திரத்தினத்திற்கு மட்டும் இட்லியும் கறிகுழம்பும் மெதுவடையும் கிடைக்கும். இப்படி அவர்களால் இயன்ற உணவை குறையவில்லாமல் அளித்தனர்.இன்று இருபதாம் நூற்றாண்டில் இவைகளை மாற்றி அன்று பணக்காரர்களின் உணவு என்று சொல்லப்பட்ட இட்லி,தோசை,பூரி மற்றும் பொங்கல் எல்லாம் இன்று பார்வையற்றோர் பள்ளிகளில் காலை மற்றும் இரவு உணவாகவும் மதியம் சாதம்,சாம்பார்,இரசம்,பொரியல் என மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

**மருத்துவம்:**

ஒருவனுக்கு உணவு எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்கு உடல் ஆரோக்கியமும் மிகவும் அவசியமானது.ஒரு குழந்தைக்கு நல்ல உணவு வழங்கிவிட்டால் மட்டும் நன்றாக படித்துவிடும் என்றில்லை.உடற் ஆரோக்கியமும் நன்றாக இருக்க வேண்டும்.ஏதேனும் நோயினால் பாதிக்கப்பட்டுவிட்டால் அவனின் கவனம் கல்வியின்மீது செல்லாது அதேபோல் பிற குழந்தைகளுக்கும் அது பரவ நிறைய வாய்ப்புண்டு.அதனால்தான் விடுதியில் மாணவர்களுக்கென்று தனி சோப்பு மற்றும் துடைக்க துண்டும் வழங்கப்படுகிறது.குளியலே உடலில் உள்ள பாதிக் கிருமிகளைக் கொன்றுவிடும்.மேலும் நம்மை சுத்தமாக வைத்திக்கொள்ள உதவுகிறது.இதுவரை இப்படித்தான் குளிக்க வேண்டும் என்றும் சோப்பு போட்டுத்தான் குளிக்க வேண்டும் என்றும் தெரியாத குழந்தைகளும் விடுதியில் இருந்தனர்.இதற்கு எடுத்துக்காட்டாக

**"தேனியில் இருந்தவரை சோப்புப் போட்டுக் கொண்டதில்லை.**
**இங்கு வந்த பிறகு சோப்பு இல்லாமல் குளிக்க அனுமதி இல்லை."(நிறங்களின் உலகம் :99)**
**"சோப்புப் போடுவது,தினம் குளிப்பது,அழுக்குத் தேய்த்தபின்**
**மீண்டும் நீராடுவது எல்லாமே எனக்குப் புதிய அனுபவங்கள்"(நிறங்களின் உலகம்:99)**

மேற்கண்ட கூற்றின்படி பாண்டி தான் பிறந்ததில் இருந்தே செங்கலும்,மண்ணும் கொண்டு ஆற்றுநீரில் குதித்து குளித்த அவனுக்கு முறையாக இப்படித்தான் குளிக்க வேண்டும் என்பதே விடுதியில்தான் கற்றுக் கொள்கிறான்.

**"அவரவர் தூண்டிடால அவரவர் உடம்பைத் துடைத்துக் கொள்ள வேண்டும். அடுத்தவருக்கு மாற்றித் தரக்கூடாது. கிரிமிகள் பரவி செரங்கு உண்டாகும்""(நிறங்களின் உலகம்:99)**

மேலும் அவரவருக்கென்று ஒதுக்கப்பட்ட தூண்டினால்தான் துடைத்துக்கொள்ள வேண்டும் கட்டாயம். இல்லையேல் சொரி மற்றும் செரங்கு போன்றவை தொற்றிக் கொள்ளும். இதனையுன் தாண்டி மாணவர்களுக்கு செரங்கு மற்றும் படை போன்றவை ஏற்பட்டுவிட்டால் அவர்களை வகுப்புக்கு அனுப்பாமல் தனி அறையில் தங்க வைப்பர். துர்நாற்றம் மிகுந்த மருந்தை உடம்பில் தேய்த்துவிடுவர்.நேரம் தவறாமல் மருந்து தடவி வெயிலில் காயவைப்பர்.பின் கஞ்சியும் புளித்துவையலும் மட்டுமே அவர்களுக்கு பத்தியச் சாப்பாடாய் வழங்கப்படும்.இப்படி பத்து நாட்களில் அது சரியாகிவிடும்.அப்படி இல்லையென்றால் அவர்களை ஆவடியிலுள்ள மருத்துவ முகாமிற்கு அனுப்பிவிடுவர்.அங்கும் ஆயாமார்கள் இருப்பர்.இவர்களுக்கென்று தனியே ஒரு கப்பும் மூன்று டம்ளர் பிடிக்கக்கூடிய அளவில் தரப்படும். பள்ளி விடுதியைவிடவும் இங்கு மாணவர்களுக்கு அதிக வசதிகள் கிடைக்கும். காலையில் கோதுமைக் கஞ்சி வழங்கினர்.சாப்பிடுவதற்கு முன் ஒரு ஸ்பூன் மீன் எண்ணை குடிக்கக் கொடுப்பர்.மதியம் அரிசிச் சோறும் வாழைப்பழமும் காய்கறியும் கீரையும் வழங்கப்பட்டது.இரவில் எளிதில் ஜீரணம் ஆகக்கூடிய கோதுமை சம்பந்தப்பட்ட உணவும் தூங்கப் போகும் முன் பசும்பாலும் ஒரு தக்காளிப் பழமும் கொடுக்கப்பட்டது.இவை அனைத்தும் மாணவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக்கூடிய உணவுப் பொருட்கள் ஆகும்.சத்தான உணவுக்கு பின்னர் காட்டமாய் இருக்கும் மருந்து ஒன்றை தடவி வெயில் படும்படியான இடத்தில் அமரச் செய்வர். இப்படியாக இருபது நாட்களில் இவர்களை பூரணமாக குணமடையச் செய்து பள்ளி விடுதிக்கு அனுப்பிவிடுவர்.இந்த மருத்துவமுகாமை இலவசமாக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த **போர்க்கி** என்பவர் நடத்திக் கொண்டிருந்தார்.குணப்படுத்த கடினமாக நோய்களுக்கே இது போன்ற மூகாம்கள் இருந்தனர்.வெறும் காய்ச்சல் போன்ற நோய்களுக்கு பள்ளி விடுதியிலேயே சிகிச்சை அளித்து நன்கு பராமரித்தனர்.ஒரு மாணவனுக்கு காய்ச்சல் என்று தெரிந்தால் தாமதமில்லாமல் மருத்துவர் வந்து சோதித்து பார்ப்பார்.சாதாரணமான காய்ச்சல் என்றால் அதற்கான மாத்திரைகளைக் கொடுத்துவிட்டு செல்வார்.காலையில் பன்ரொட்டியும் மதியம் மற்றும் இரவிற்கு கஞ்சியையும் இருக்கும் அறைக்கே கொண்டு வந்து கொடுப்பர்.சாரணர்களும் அடிக்கடி சென்று மாணவர்களின் உடல் நிலையை சோதித்துக் கொண்டே இருப்பர்.மாணவர்களுக்கு வீட்டு நியாபகம் வராத அளவிற்கு அவர்களின் பெற்றோர்கள் போலவே நோயுடன் இருக்கும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டனர்.

**பார்வையற்றோருக்கு வழங்கப்படும் கல்வி:**

**"அரிது அரிது**

**மானிடராய்ப் பிறத்தல் அரிது**

**அதனினும் அரிது**

**கூன் குருடு,செவிடு,பேடு**

**இன்றிப் பிறத்தல் அரிது**

**அவ்வாறு பிறத்தல் அரிது**

**கல்வியும் நயத்தல் அரிது"(ஔவையார் தனிப்பாடல் திரட்டு)**

இந்த மண்ணைப் பொறுத்தவரை ஒருவன் மனிதனாய் பிறப்பதே அரிது.அதனைவிட அரியது அவன் எக்குறையும் இல்லாமல் பிறப்பது.அப்படி குறையுடன் பிறந்துவிட்டால் அவனுக்கு கல்வி என்பது மிகவும் அரிதான ஒன்று .அதனை அவன் கற்கவில்லையேல் அவனுக்கு கல்வி என்பது மிகவும் அரிதான ஒன்று அதனை அவன் கற்கவில்லையேல் அவன் வாழ்வை வாழ்வது மிகவும் கடினம் என சங்க காலத்திலேயே ஔவையார் கூறிவிட்டார்.

**"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**

**பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே"**

**"கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**

**மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே"(புறநானூறு:183)**

அஃதாவது தமக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்க்குத் தேவைப்படும் பொழுது உதவி செய்தும்,மிகுந்த அளவில் பொருளைக் கொடுத்தும் கற்பது நல்லதாகும் என்றும் அப்படி ஒரு குடும்பத்தில் பிறந்த ஒருவன் கல்வி கற்பின் அவனை பின் தொடர்ந்து பலரும் அதனை செம்மையாக செய்ய கல்வி வழிக்காட்டும்.

கல்வி ஒன்றுதான் சாதாரண மனிதனைக் கூட மகத்துவமாக மாற்றும் வல்லமை படைத்தது.சாதாரண மனிதனுக்கே இப்படியென்றால் பார்வையற்றவர்களைச் சமுதாயத்தோடு ஒருங்கிணைக்கும் பணியைக் கல்வியானது சிறப்பாக செய்கிறது.அவர்களையும் நல்ல வேலையில் அமர்த்துகிறது.நமது நாட்டில் பார்வையற்றோருக்கான கல்வி வரலாற்றினை ஆராய்ந்தால் மூன்று விதமான வழிமுறைகளில் வழங்கப்படுகிறது.அவை 1.சிறப்புக் கல்வி 2.ஒருகிணைந்த கல்வி 3.அனைவருக்கும் கல்வித்திட்டத்தால் வழங்கப்படும் உள்ளடங்கிய கல்வி ஆகியவை ஆகும்.மேற்கூறப்பட்ட மூன்று வழிமுறைகளில் முதல் இரண்டு வழிமுறைகளில் சில குறைகள் இருந்தாலும் அவை பார்வையற்றோருக்கு மிகப் பொருத்தமானவை.ஆனால் இங்கு மூன்றாவதாகக் குறிப்பிடப்படும் அனைவருக்கும் கல்வித்திட்டம் கடந்த பதினைந்து ஆண்டுகளில் பள்ளி செல்லும் பார்வையற்றோரின் எண்ணிக்கையை உயர்த்தி இருக்கலாம்.ஆனால் இத்திட்டத்தின் வாயிலாகப் படிக்கும்

பார்வையற்றவர்கள் பட்டம் பெற்றாலும் அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகவே தேங்கிவிடுகின்றனர்.ஏனென்றால் அவர்களுக்கு பிரெயில் என்பது முறையாகக் கற்பிக்கப்படுவதே இல்லை.அதனை பயிற்றுவிக்க முறையாகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் இல்லை.

**சிறப்புக்கல்வி:**

சிறப்புக் கல்வி என்பது பொதுவாக ஊனமுற்ற மாணவர்களுக்கு அறிவுறுத்தபடும் கல்வி ஆகும்.மாணவர்களின் சிறப்பித் தேவைகளுக்கு இடம் அளிக்கும் முறையாக கண்காணிக்கபடும் கற்பித்தல் முறையை தழுவியது.இதற்கென்று தனியே உபகரணங்கள்,பொருட்கள் மற்றும் அதனை பயன்படுத்தும் அமைப்பையும் உள்ளடக்கியது.இவைகள் எல்லாம் சிறப்புத்தேவைகள் கொண்ட தனிநபர்கள்,பள்ளியிலும் அவர்களின் சமூகத்திலும் அதிக அளவிலான தனிப்பட்ட முறையில் வெற்றியை அடைவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.

சிறப்புக் கல்வியானது மாணவர்களுக்கு வழக்கமாக வழங்கப்படும் வகுப்பறைக் கல்விக்கான பயிற்சியாய் இல்லாமல் அவர்களை முன்னேற்றும் வகையிலான சக்தியாய் இந்த பயிற்சியானது அமைகிறது.இந்த சிறப்புக்கல்வியானது யாருக்கு வழங்கப்படும் என்றால் ஊனமுற்ற மாணவர்களுக்கு மட்டும் சிறப்பாக வழங்கக்கூடிய கல்வி முறையாகும்.இதில் அவர்களின் கற்றல் குறைபாடுகள்,கற்றல் சிரமங்கள்,தகவல் தொடர்பு கோலாறுகள்,வளர்ச்சிக் குறைபாடுகள் மற்றும் பிற குறைபாடுகளுடைய ஊனமுற்ற மாணவர்களுக்கு பல்வேறு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தனி வகுப்பறையின் மூலமாக கல்விச் சோலைகளை வழங்கி அவர்களை பயனடையச் செய்வார்கள்.

இந்த வகையான சிறப்புக் கல்வியானது வழங்க அனைத்து வகையான மாணவர்கள் கல்வி கற்கும் அரசு பள்ளிகளில்,அரசு உதவி பெறும் பள்ளிகளில் மற்றும் தனியார் பள்ளிகளில் ஊனமுற்ற மாணவர்களுக்கென தனியான சிறப்புக்கல்வி(special education) என்ற ஒரு வகுப்பறையை அமைப்பர். அதில் சேர்க்கப்படும் பார்வையற்ற ,காது,கேளாத, மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளை தனியே சிறுகுழுக்களாக பிரிப்பர். பின்னர் அவர்களை வழிநடத்த குழுக்கு ஒரு பொறுப்பாசிரியை நியமிப்பர்.அவர்கள் இவர்களுக்கு தேவைப்படும் கல்வியினை அவர்கள் எவ்வாறு எம்முறையைப் பயன்படுத்தி கற்க வேண்டுமோ அம்முறையினைக் கொண்டு பயிற்சி அளிப்பர்.ஆனால் இதில் ஒரு சிக்கல் உண்டு.இது மாதிரியான பொதுவான மாணவர்கள் மட்டுமே கற்க முன்வருவர்.ஆனால் இவர்களின் அடிப்படை கல்வியானது இவர்களுக்கு இவர்களுக்கென சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள சிறப்புப்பள்ளியின் மூலமாகவே கிடைக்கப்பெறும். அதற்கென தனியாக பார்வையற்றோர் சிறப்புப்பள்ளி,காது கேளாதோர் சிறப்புப்பள்ளியியென அனைத்து வகையான மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கும்

தனித்தனியே சிறப்புப் பள்ளிகள் உண்டு.அதனையே நாம் சிறப்புக்கல்வி என்ற பெயரில் சிறப்புப் பள்ளிகளில் வழங்குகிறோம். இந்த மாதிரியான பள்ளிகளில் இவர்காளுக்கென தனியே கல்வியினை எளிதில் அவர்களுக்கு புரியும் முறையில் கற்பிக்கத் தேவைப்படும் உபகரணங்கள் இருக்கும்.அதனைப் பயன்படுத்தி அவர்களுக்கு எளிதில் புரிய வைப்பர்.இவர்களின் பயிற்சி முறையினைப் பற்றி பின்வரும் கல்வித்தலைப்பினை அடுத்து விரிவாக காணலாம்.

**ஒருங்கிணைந்த கல்வி:**

1994-ல் சலமன்கா அறிக்கை (யுனங்கோ) வெளியிடப்பட்டவுடன் மாற்றுத்திறனாளி மாணவர்களை பிரதான பள்ளிகளில் சேர்ப்பதை ஊக்குவிக்கும் வகையில் ஏராளமான வளரும் நாடுகள் தங்கள் கொள்கைகளை மறுசீரமைக்கத் தொடங்கின.**"உள்ளடக்கிய கல்வி"**(அ)**"ஒருங்கிணைந்த கல்வியை"** ஊக்குவிக்கும் கொள்கைகள் அல்லது சட்டங்கள் இப்போதும் இருந்தாலும் பல வளரும் நாடுகள் "பிரிக்கப்பட்டப்" பள்ளிகளில் குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கு கல்விச் சேவைகளைத் தொடர்ந்து வழங்கி வருகின்றனர்.பொதுவாக "ஒருங்கிணைந்த கல்வி" என்பது ஊனமுற்ற மாணவர்களுக்கு முதன்மையாக பொதுக்கல்வி அமைப்புகளில் வழக்கமான வகுப்பறை ஆசிரியரின் பொறுப்பின் கீழ் வழங்கப்படுவது."ஒருங்கிணைந்த கல்வி"யில் முடிந்த வரை மாற்றுத்திறனாளி மாணவர்கள் வழக்கமான பள்ளிகளுக்குச் செல்கிறார்கள்.எவ்வாறாயினும் ஒரு மாணவரின் கல்வித் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இந்த கல்வி மாணவர்களிடம் வலியுறுத்தப்படுகிறது.இந்தியாவில் "ஒருங்கிணைந்த கல்வி" முக்கியமாக லேசான குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.அவர்கள் வழக்கமான பள்ளி திட்டங்களில் எளிதில் இணைக்கப்படுகிறார்கள்.கடுமையான குறைபாடுகள் உள்ள மாணவர்கள் சிறப்புப் பள்ளிக்கு அனுமதிக்கப்படுகிறார்கள் அல்லது பள்ளிககே செல்வதில்லை என்னும் நிலை உள்ளது.

"ஒருங்கிணைந்த கல்வியை" ஊக்குவிப்பதற்காக இந்திய அரசாங்கத்தின் முக்கிய முயற்சிகளில் ஒன்று ஊனமுற்ற குழந்தைகளின் ஒருகிணைந்த கல்வித்திட்டமாகும்(IEDC).சலமன்கா அறிக்கை வெளியிடுவதற்கு முன்னதாக 1974-ஆம் ஆண்டில் இந்திய மத்திய அரசின் நலன்புரி அமைச்சகம் மிதமான குறைபாடுகள் உள்ள மாணவர்களை வழக்கமாக இயங்கும் பள்ளிகளில் சேர்க்கும் திட்டத்தை ஊக்குவிக்க IEDC திட்டத்தை தொடங்கியது.மாற்றுத்திறனாளி குழந்தைகளை வழக்கமான பள்ளியில் தக்கவைப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.குழந்தைகளுக்கு புத்தகங்கள்,எழுது பொருட்கள், பள்ளிசீருடைகள்,போக்குவரத்து மற்றும் நிதியுதவி வழங்கப்பட்டது.இத்திட்டத்தை வழக்கமான பள்ளிகளில் பயன்படுத்த மாநில அரசுகளுக்கு ஐம்பது சதவீத நிதியுதவி அளிக்கப்பட்டது.இருப்பினும் இத்திட்டம் சிறிய அளவிலேயே வெற்றி பெற்றது.இத்திட்டம்

வெற்றி பெறாததற்கு பயிற்சி பெற்ற அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் இல்லாமை,ஊனமுற்ற குழந்தைகளின் பிரச்சினைகள் குறித்து வழக்கமான பள்ளி ஆசிரியர்களுக்கு தெரியாத நிலை மற்றும் கல்வி தேவைகானப் பொருட்கள் கிடைக்காதது தோல்விக்கான முக்கிய காரணிகளாக அமைகின்றன.மேலும் இத்திட்டதை செயல்படுத்த பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களின் ஒருங்கிணைப்பு இல்லாமையும் தோல்வியின் முக்கியக் காரணிகளாகும்.இந்த குறைபாடுகள் காரணமாக 1992-ல் திருத்தப்பட்ட திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட ஒருங்கிணைந்த கல்வித்திட்டத்தில் 100 சதவீத உதவி கிடைத்தது. இத்திட்டத்திற்கு அரசு சாராத நிறுவனங்களும் தற்போது முழு நிதியுதவி அளித்துள்ளன. இத்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் ஆசிரியர் பயிற்சி கூறு ஆகும். ஆசிரியர்கள் ஊனமுற்ற மாணவர்களுடன் ஒருங்கிணைந்த அமைப்புகளில் பயிற்சி பெற்றனர்.இத்திட்டத்தினை பற்றிய புரிதல் பள்ளி பணியாளர்கள் பலரும் அறிந்திருக்கவில்லை.மாற்றுத்திறனாளி மாணவர்கள் வழக்கமான பள்ளிகளில் சேர்க்க நிதி கிடைப்பதும் பலரும் அறியாத ஒன்றாக உள்ளது.எனவே குறிப்பாக மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர் சட்டத்தில் கூறப்பட்டுள்ள பல்வேறு சலுகைகளை அறியாதவரை இந்த ஒருங்கிணைந்த கல்வியை வழங்குவதில் அரசு காட்டும் முயற்சி வீணாகிவிடும்.

ஒருங்கிணைந்த கல்வியை அமல்படுத்தத் தொடர்பான பிரச்சனைகளில் முதன்மையானது பள்ளி கல்வியாளர்க்கு பயிற்சி தேவை என்பது தெளிவாகிறது.எனவே ஆசிரியர்களுக்கான பயிற்சி முதன்மையானதாக இருக்க வேண்டும்.இந்தியாவில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் ஒரு ஆசிரியருக்கு பயிற்சி அளிக்கலாம்.அதன்மூலம் மாணவர்களுக்கும் முறையான பயிற்சியை அளிக்க முடியும்.சிறப்புப் பள்ளியில் சேர முடியாத மாணவர்கள் ஒரு வேலை இந்த ஒருங்கிணைந்த கல்வியின் கீழ் சிறிதளவிலேனும் பயிற்சி பெற்று பயனடையலாம்.

**அனைவருக்கும் கல்வித்திட்டத்தால் வழங்கப்படும் உள்ளடங்கியக் கல்வி:**

அனைவருக்கும் கல்வித்திட்டத்தால் வழங்கப்படும் உள்ளடங்கியக் கல்வி என்பது. எந்த ஊரில் உள்ள எவ்வகையான குழந்தைகளும் தனது ஊரிலுள்ள அரசு பள்ளியில் சேர்ந்து எந்த வித தடையும் இல்லாமல் கல்வி கற்பது ஆகும். இந்த முறை சாதாரண மாணவர்களுக்கு நல்ல கல்வியினை அளிக்கவல்லது.ஆனால் இந்த மாதிரியான பள்ளிகளில் மாற்றுத்திறனாளிகள் இத்திட்டத்தின் விளைவாய் கல்வி கற்க பள்ளியில் சேரலாம்.கல்வியும் கற்கலாம்.ஆனால் அது அவர்களின் வாழ்வில் பயன் அடைய செய்யுமா? என்றால் இல்லை.ஏனென்றால் முன்கூறப்பட்ட இரண்டு திட்டத்திலும் சில குறைகள் இருப்பின் அத்திட்டம் முழுமையாக மாற்றுத்திறனாளிகளுக்கென உருவாக்கப்பட்டது.ஆனால் இத்திட்டமானது எல்லா விதமான மாணவர்களும் ஒன்றாக இணைந்து படிப்பது ஆகும். மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு அடிப்படை கல்வி என்பது மிகவும் அவசியமானது. அதுவே அஸ்திவாரம். அதனை சிறப்புப்

பள்ளியின் வழி கற்பதே மிகப் பொருத்தம். அடிப்படை கல்வியினை முடிந்த பின் அக்குழந்தை உயர்நிலை கல்விக்கு அனைத்து மாணவர்கள் பயிலும் பள்ளிக்கு சென்றாலும் அந்த மாணவனால் எல்லாவற்றையும் புரிந்துக் கொண்டு படிக்க இயலும் எனவே அடிப்படை பயிற்சி என்பது இங்கு முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது.

இந்த திட்டத்தின் மூலம் நாட்டில் பெரும்பான்மையானவர் கல்வி கற்க முடியும்.அதே போல் இத்திட்டத்தின் வழி பெருமளவு மாற்றுத்திறனாளி குழந்தைகளும் தங்களின் வீட்டில் அருகாமையிலுள்ள கல்விநிலையங்களில் கல்வி கற்பர், தேர்ச்சியும் பெற்று பட்டமும் வாங்குவர். ஆனாலும் அவர்களுக்கு எழுதவோ படிக்கவோ தெரியாமலேயே இறுதி வரை வாழக்கூடும். அவர்களுக்கு பிரெயில் என்பது முறையாகக் கற்பிக்கப்படுவதே இல்லை. அதனைக் கற்பிக்க முறையான பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் இல்லை. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்டங்களிலும் காணப்படும் அனைத்து ஒன்றியங்களிலும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மாற்றுத்திறனாளி குழந்தைகளை கணக்கெடுக்கும் பணி நடத்தப்படுகிறது. இந்த கணக்கெடுப்பின் இறுதியில் இத்திட்டத்தின் கீழ் சிறப்பு ஆசிரியர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் இந்த முகாமானது நடத்தப்பட்டு மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்படுகிறது. அதன்பின்னர் அவர்கள் தங்களின் வீட்டிற்கு அருகாமையில் உள்ள பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். இப்படி ஒவ்வொரு பகுதிகளிலும் சேரும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப சிறப்பாசிரியர்கள் தற்காலிகமாக நியமிக்கப்படுகிறார்கள். எட்டு மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் எனப் பிரிக்கப்பட்டு அவர்களின் கீழ் இந்த மாணாவர்கள் கல்வி கற்பர்.

ஆனால் இதிலும் பல சிக்கல்கள் உண்டு.அவை ஒரு சிறப்பு ஆசிரியரின் கீழ் இருக்கும் எட்டு மாற்றுத்திறனாளி மாணவர்களும் ஒரே விதமான பாதிப்பிற்குள்ளானவர்களாக இருக்க மாட்டார்கள். சிலர் பார்வையற்றோராகவும் வேறு சிலர் காது கேளாதவர்களாகவும் இன்னும் சிலர் மனவளர்ச்சிக்குன்றிவர்களாகவும் இருப்பர்.ஆனால் சிறப்பாசிரியரோ இவைகளில் ஏதேனும் ஒன்றில் மட்டுமே சிறப்பு ஆசிரியக்கான பயிற்சி பெற்றப்பட்டவராக இருப்பர். உதாரணமாக பார்வைமாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான சிறப்பு கல்வியில் பட்டம் பெற்றிருந்தால் அவரால் அந்த குழந்தைகளுக்கு மட்டுமே முறையாக பயிற்சியினை அளிக்கமுடியும். மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளையோ அல்லது செவித்திறன் குன்றிய குழந்தையினை எப்படி எவ்வழியில் கல்வி கற்பிக்க இயலும்.

ஒரு வட்டாரத்தில் ஒரு சிறப்பாசிரியரின் கீழ் இணைக்கப்படும் எட்டு மாணவர்களும் ஒரே பள்ளியை சேர்ந்த மாணவர்களாகதான் இருப்பார்களா என்று கேட்டால் அதுவும் இல்லை. வெவ்வேறு பள்ளியின் கீழ் எட்டு மாணவர்கள் அல்லது ஒரே பள்ளியில் இரண்டு பேர் அல்லது

ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September2024

மூன்று பேர் இணைந்து கற்கலாம். ஆனால் எட்டு மாணவர்களும் ஒரே பள்ளியின் கீழ் கல்வி கற்பவர்களாக இருக்கமாட்டார்கள். இது கொடுமையிலும் கொடுமை ஏனென்றால் ஒரு மாணவருக்கு ஒரு முழுநாள் என செலவிட்டு சிறப்பாசிரியர் சந்தித்து அவர்களின் சந்தேகங்களை தீர்த்து வைப்பதே பெரும் சவலான விஷயமாகிவிடும். குறைந்தது எட்டு நாட்களுக்கு ஒரு முறைதான் ஒரு மாணவரை சிறப்பாசிரியர் கண்டு சந்தேங்களைத் தீர்க்க இயலும். பிற நாட்களில் சாதாரணக் குழந்தைகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர்தான் முழுப்பொறுப்பினையும் ஏற்க வேண்டி இருக்கும்.

இதனால் இவர்களால் எளிதில் மனப்பாடம் செய்து அதனை விரைவாய் மனதில் பதியவைத்துக் கொள்வர்.ஆனால் எழுதவோ,படிக்கவோ இயலாதவர்களாகிவிடுகின்றனர். பெற்றோர்களுக்கும் ,வகுப்பாசிரியர்களுக்கும் இதனைப் பற்றிய புரிதல் இருப்பது குறைவு. ஒரு குழந்தைக்கு மிக முக்கியமானது கவனித்தல், பேசுதல்,எழுதுதல் மற்றும் படித்தல் இந்த நான்கில் இந்த திட்டத்தின் வழி பேசுதலையும் கவனித்தலையும் நன்கு கற்கும் குழந்தைகளால் எழுதவோ படிக்கவோ திறனற்றவர்களாகிவிடுகின்றனர். இதனை தீர்த்து இந்த திட்டத்தினை செம்மையாக கொண்டு செல்ல வேண்டுமென்றால் சிறப்பாசிரியர்கள் எதில் தேர்ச்சிப் பெற்றவரோ அந்த துறையிலுள்ள குழந்தைகளை அவரின்பால் ஒப்படைக்க வேண்டும். மேலும் பார்வையற்ற மாணவர்களாக இருந்தால் கட்டாயம் பிரெயில் முறையினை கற்பிக்கப்பட்டு அதன்வழி அவர்களை நன்கு எழுதவும் படிக்கவும் கற்கக் கொடுப்பது அவசியமான ஒன்றாகும். அந்தந்த சிறப்பாசிரியர்கள் சிலகாலம் அந்தந்த பள்ளியிலேயே இருந்து கற்பித்தலும் வேண்டும்.இதன்மூலம் இந்த அனைவருக்கும் கல்வி என்ற திட்டம் வெற்றி பெற நிறைய வாய்ப்புகள் உண்டு.

**பார்வைமாற்றுக் குழந்தைகளுக்கான கற்பித்தல் கருவிகள்:(Teaching Aids)**

பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தங்களின் கல்வியினைக் கற்கவும் எழுதவும் படிக்கவும் நோட்டு புத்தங்களைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் பயிலும் ஒவ்வொரு எழுத்திற்கும் எண்ணிற்கும் வடிவங்கள் உண்டு என்று கண்களால் கண்டுக் கற்றுக் கொள்கிறார்கள். ஆனால் பார்வையற்ற மாணவர்களிடம் இது சாத்தியமில்லை. எனவே இவர்களுக்கென தொட்டு உணர்ந்து படித்து புரிந்துக் கொண்டு எழுதவும் படிக்கவும் சில கருவிகள் உள்ளன. அதனைப் பயன்படுத்தி அவர்கள் படித்துக் கொள்வர். அவை பிரெயிலி,டைலர்,அபாகஸ் மற்றும் குரல் பதியும் கருவி.

**பிரெயிலி :(Braile)**

இரவு எழுத்து என்பதனை முதன்மையாகக் கொண்டு அதன்வழி வந்ததே இந்த பிரெய்லி முறையாகும். இரவு எழுத்து(Night writing) என்பது **சார்லஸ் பார்ப்பியர் டி லா செர்ரே** என்பவரால் 1815-இல் பிரெஞ்சு மொழியில் கண்டுபிடிக்கப்பட்டது.இந்த இரவு எழுத்தானது

எழுத்தாளர் ஒரு கர்சர் பஞ்சை நகரச் செய்து 2 *6 புள்ளிகளால் எழுதுவர். காகிதத்தின் பின்புறத்தில் தோன்றும் எழுத்து தலைகீழாக அமையும் எனவே ஒருவர் வலமிருந்து இடமாக எழுத வேண்டும்.

அந்தக் காலத்தில் இது ஒரு அசாதாரண முன்னேற்றம். ஆனால் பார்பியரின் இந்த இரவு எழுத்து பல வரம்புகள் மற்றும் குறைபாடுகளை எதிர் கொள்ளவேண்டியிருந்தது. அவை

1. நிறுத்தற்குறிகள் , எண்கள், கணிதக் குறியீடுகள் போன்றவற்றைக் குறிக்கும் புள்ளிகளின் சேர்க்கைகள் எதுவும் இல்லை.

2. கட்டத்தின் உயரம் 2*6 புள்ளிகளென 12 புள்ளிகளைக் கொண்டதால் ஒரே விரலினைக் கொண்டு படிக்க முடியாமல் போனது.இதனால் இந்த முறை பலரிடமும் சென்றடையாமல் இருந்தது.

இந்த முறையைக் கற்றுக் கொண்ட்டு இதனைப் பயன்படுத்தி தோல் தொழிலாளியின் மகனான '**பிரெய்ல் லூயி**' என்ற சிறுவன் தனது 15 -வது வயதில் 'பிரெய்லி' என்ற முறையைக் கண்டறிந்தார்.இவர் தன்னுடைய மூன்றாம் அகவையில் தந்தையின் கடையில் இருந்த கத்தியை எடுத்து விளையாடும் போது கண்ணில் ஊடுருவியதால் தனது பார்க்கும் சக்தியை இழக்கிறார். தன்னை போன்ற பார்வையற்றவர்களுக்கு வாசிப்பதற்கு முறையான ஒரு பாடமுறையை எப்படியாவது கண்டறிய வேண்டும் என்று முறையாக உருவாகாத இரவு எழுத்தினைக் கற்றுக் கொள்கிறார். அதனை பின்பற்றி 12 புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டு வரிசையில் மூன்று புள்ளிகளின் வீதம் 3*3 என்ற முறையில் ஆறு புள்ளிகளின் அடிப்படையில் ஒரு முறையை கண்டறிந்தார். அதனைக் கொண்டு எழுத்துக்களை எளிதில் ஒரு விரலால் தொட்டுணர்ந்து என்ன எழுத்து என்பதனைக் கண்டறியலாம். இவர் இதனைக் கண்டறிந்து பத்து ஆண்டுகளுக்கு பிறகு 1829-ல் தான் பிரெய்ல் உருவாக்கிய இந்த முறை வெளியாகியது. இவர் ஆசிரியராகப் பணிப்புரிந்த பாரிஸ் நேஷனல் இன்ஸ்டிடியூட்டில் இருந்துதான் இம்முறையானது அறிமுகப்படுத்தப்பட்டது.

1932-இல் கூடிய சர்வதேச மாநாட்டில் தான் பிரெயில் லிபிக்கு முழு அங்கிகாரம் கிடைக்க பேச்சுவார்த்தை தரமாக இருந்து ஒரு வழிமுறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இன்று இந்த முறை பல பார்வையற்றவர்களை தன்னிச்சையாக செயல்பட்டு தங்களுக்கான பாடத்தை தாங்களே படிக்க பெரிதும் உதவி செய்து இருக்கின்றது. அதனால்தான் ஜனவரி-4 ஆம் தேதி உலக பிரெய்லி தினமாக அறிவக்கப்பட்டுக் கொண்டாடப்படுகின்றது.

**டெய்லர் சட்டகம்:(Taylor frame)**

கண்பார்வை குறைந்த அல்லது பார்வையற்ற மாணவர்கள் எழுத்துக்களை பிரெயிலி முறைப்படி அறிந்து தெரிந்துக் கொள்கின்றனர். அதே போல எண்களையும் தெரிந்துக் கொள்வது மிகவும் முக்கியமான ஒன்றாகும். அதனை அறிந்து 19-ஆம் நூற்றாண்டில்

இங்கிலாந்து கணிதவியலாளர் **ரெல் வில்லியம் டெய்லர்** பார்வையற்ற மாணவர்களுக்கும் கணிதம் கற்பிக்க ஒரு சாதனத்தை உருவாக்கினார். அதுவே டெய்லர் சட்டகம் என்று இந்நாளில் அழைக்கப்படுகிறது. இது ஒரு மரத்தினால் ஆன சட்டகத்தை உடையது.இதன் உள்ளே எட்டு புள்ளிகள் கொண்ட குட்டி குட்டி அலுமினிய சட்டகம் நட்சத்திம்ம் போன்ற அமைப்பு இருக்கும் . இதனைப் பயன்படுத்தியே முதலில் குழந்தைகள் எண்களைக் கற்றுக்கொள்வர். இந்த அலுமினிய சட்டமானது 15 வரிசையும் 24 நெடுவரிசையும் கொண்டது. இதன் ஒவ்வொரு நட்சத்திர வடிவிலும் எட்டு புள்ளிகளின் அமைப்பை நம்மால் காணமுடியும். இதில் பொருத்த சிறிய ஊசி போன்ற அமைப்பினை கொண்ட ஒரு அலுமினிய வடிவமுடைய சிறிய துண்டுக் கருவிகள் இதனோடு கொடுக்கப்படும். அதனை ஒவ்வொன்றாக எடுத்து இதில் சரியாக பொருத்துவதி மூலம் அவர்கள் எண்களைக் கற்பார்கள். எட்டு புள்ளிகளின் ஒவ்வொரு மூளையிலும் சரியாக இந்த ஊசி போன்ற சிறிய தூண்டு கருவியினை பொருத்துவதன் மூலம் மாணவர்களால் எண்களை எளிதில் கற்று எழுத இயலும். இந்த பொருத்தும் கருவியானது இரண்டு வெவ்வேறு வடிவமுனைகளைக் கொண்டது. ஒரு பக்கம் முள் போன்ற பகுதியும் மற்றொரு பக்கம் மேடு போன்ற பகுதியினையும் உடையது. இதனை எடுத்து சட்டகத்தின் வலது மூளையை நோக்கி மேடான பகுதியினைப் பொருத்தினால் அது ஒன்று என்ற எண்ணைக் குறிக்கும். இது போன்று ஒன்பது வரையிலான எண்களை மேலிருந்து கீழ் அடுக்குவர். பத்து என்ற இரட்டைப்படை எண் வரும் பொழுது இரண்டினை எடுத்து ஒன்றிற்கும் பூஜ்ஜியத்திற்கும் பொருத்துவர். இது வெறும் எண்களை மட்டும் உள்ளடக்கியது கிடையாது. கணக்கில் வரும் கூட்டல்,கழித்தல்.வகுத்தல்,பெருக்கல் போன்ற குறியீடுகள் மற்றும் அதனை தீர்க்கவும் நமக்கு இந்த டெய்லர் சட்டகம் பயன்படுகிறது. எனவே பார்வையற்ற மாணவர்களும் எளிதில் எண்களை கற்று கணிதக் கணக்கை தீர்க்க இந்த சட்டகம் பெரும் பொக்கிஷமாகக் கிடைத்துள்ளது.

**எண்சட்டம்:(Abacus)**

எண் சட்டம் என்பது கணிப்பீட்டுக் கருவியாகும். ஆரம்ப காலத்தில் இது மண்,கல், மரம் அல்லது உலோகத்தையுடைய நீண்ட குறுகிய பள்ளம் போன்ற அமைப்புகளில். விதைகள் அல்லது கற்களை வைத்து நகர்த்துவது போல அமைப்பட்டது. ஆனால் தற்காலத்தில் இந்த காலத்திற்கு ஏற்றவாறு செவ்வக வடிவ சட்டத்தில் குறுக்காக உள்ள இணைப்பு குச்சிகளில் மணிகளைக் கோர்த்து உருவாக்கப்பட்டுள்ளது. அவர்கள் என்றால் மிருதுவாக மணல் என்று பொருள் அதனால் இச்சொல்லானது Abq என்ற அரேபிய அல்லது Abax என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வந்திருக்க கூடும்.

கணிதம் என்றாலே நமக்கு தோன்றுவது இலக்கங்களும் அதன் செயல் முறைகளான கூட்டல்,கழித்தல்,பெருக்கல் மற்றும் வகுத்தல். இதனின் மொத்த அமைப்பே கணிதம்

எனலாம். ஆனால் கணிதம் என்பது வரும் அறிவியல் சாதனம் ஆகும். இதனால்தான் கலிலியோ "கணிதத்தின் உதவியால் நாம் இவ்வுலகத்தையே அறியலாம்" என்றார். ஆரம்ப காலத்தில் கணிதம் என்பது வெறும் எண் கணிதமாகத்தான் இருந்தது. ஆனால் கணிதத்தால் மட்டுமே அறிவியல் வளரும் என்பதனை நாம் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

எனவே இந்த எண்சட்டமுறையானது அனைத்துவிதமான மாணவர்களையும் சென்றடைய வேண்டும். அதனால் செவ்வக அமைப்பின் இறுதியில் எழுதப்பட்ட புள்ளிகளின் அமைப்பு இருக்கும். அதனை தொட்டு உணர்ந்து அதுதான் ஆரம்ப புள்ளியென பார்வையற்ற மாணவர்கள் தெரிந்துக் கொள்வர். இதற்காகத்தான் முன்னரே பிரெயிலி முறையில் எழுதப்பப்பட்ட புள்ளிகளின் மூலம் எழுத்துக்களைக் கற்கின்றனர். அதனைக் கொண்டு இந்த எண்சட்டத்தின் ஆரம்ப புள்ளியினைக் கண்டறிந்த அதன் கழ் கொடுக்கப்பட்டுள்ள மணிகளை நகர்த்தி எண்களை எப்படி கூட்டுவது , கழிப்பது போன்ற கணக்கீட்டினை மாணவர்கள் அறிந்துக் கொள்வர். இதற்கு பார்வை தெரிய வேண்டுமென்ற அவசியமில்லை தொட்டுணரும் திறன் இருந்தாலே போதுமானது. எனவே இந்த எண்சட்டமானது அடிப்படைக் கணிதத்தை பார்வையற்ற மாணவர்களுக்கு கற்கும்படியாக தெரிந்தோ தெரியாமலே வடிவமைக்கப்பட்டிருப்பது சிறப்பு.

**பார்வைமாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான ஆசிரியர்களும் கற்பிக்கும் முறையும்:**

ஒரு மனிதனுக்கு உண்ணும் உணவு எவ்வளவு முக்கியமோ அதற்கு நிகராகக் கல்வியும் முக்கியமானதாக இந்த காலகட்டத்தில் கருதப்படுகிறது. சாதாரண மனிதனுக்கே கல்வியே மிகவும் அவசியமானதாகக் கருதப்படும். இந்த காலகட்டத்தில் மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கு அது இன்னும் ஒரு படி மேலாகக் கருதப்படுகிறது. அப்படி இந்த மாதிரியான மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு வழகங்கப்படும் கல்விமுறை சற்று மாறுபட்டது. அதேபோல அதனை கற்பிக்கும் ஆசிரியர்களும் மாறுபட்டவர்களாகத்தானே இருக்க முடியும். சாதாரண மாணவர்களுக்கு கற்றுத் தருவதே போல மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கும் கற்றுக் கொடுத்தால் எப்படி அவர்களுக்கு புரியும். எனவே இவர்களுக்கென்று சில மாற்றங்களைக் கொண்டு கற்பிக்கும் முறையானது சற்று வேறுபடும்.

"ஆசிரியர்பணி அறப்பணி அதற்கே என்னை அர்ப்பணி" என்ற வார்த்தைகளைக் கேட்டு வளர்ந்தவர்கள் எல்லாம் சாதாரண மாணவர்களை கறை தேற்றும் ஆசிரியரின் பணி அறப்பணி என்றால் வாழ்கையில் பிறரையே நம்பி வாழக்கூடிய மாற்றுத்திறனாளி மாணவர்களின் வாழ்க்கையினை தனிச்சையாக செயல்பட வைக்கும் கல்வியினைக் கற்றுத்தரும் ஆசிரியர்களின் பணி எப்படிப்பட்ட தெய்வீகப் பணியாக இருக்க முடியும். குருவிற்கு பின்தான் நாம் தெய்வத்தையே வைக்கிறோம். அப்படிப்பட்ட பணியினை செய்பவர்கள் ஆசிரியர்கள். பொதுவாக நாம் ஆசிரியர்களின் இலக்கணமாக நன்னூலார் கூறுவது.

ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September2024

**"கலையில் தெளிவு கட்டுரை வன்மை**
**நிலம் மலை நிறைக்கோல் மலர்நிகழ் மாட்சியும்**
**உலகியல் அறிவோடு உயர்குணம் இணையும்**
**அமைபவன் நூலரை ஆசிரி யன்னே"**

கற்ற கல்வியில் தெளிவு என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். தெளிவு இல்லையென்றால் மாணவர்களின் ஐயங்களை தீர்க்கவும் முடியாது. அவர்களுக்கு நல்ல முறையில் சரியானவற்றை கற்று தரவும் இயலாது. சாதாரண மாணவர்களுக்கு கற்றுத் தருவதற்கே தெளிவு அவசியமென்றால் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு கற்றுத்தருவதற்கு எவ்வளவு பயிற்சியும் தெளிவும் தேவைப்படும் பிற மாணவர்களுக்கு வகுப்பு எடுக்க ஆசிரியர் பயிற்சியே போதுமானது. மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு பயிற்சியளிக்க சிறப்புக்கல்வி(Special Education) என்ற ஆசிரியர் பயிற்சி கல்வி மிகவும் முக்கியமானது. அதிலும் ஆரம்ப கல்வி கற்கும் மாணவர்களுக்கு இளைய தர டிப்ளமா என்ற படிப்பும் உயர்க்கல்வி மாணவர்களுக்கு பயிற்சியளிக்க மூத்த தர டிப்ளமா படிப்பு போன்ற படிப்புகளை ஆசிரியர் முடித்திருக்க வேண்டும். அதேபோல ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆசிரியர் இருப்பது போல இந்த சிறப்புக்கல்வி முறையிலும் ஒவ்வொரு ஆசிரியரும் ஏதோ ஒரு களத்தில் சிறப்புப் பயிற்சி பெற்றவராக இருப்பர். உதாரணத்திற்கு பார்வையற்ற மாணவர்களுக்கு எந்த மாதிரியான உபகரணங்கள் பயன்படுத்தி கற்றுத்தர வேண்டும் என்று அதில் சிறப்புக்கல்வி முடிந்த ஆசிரியருக்கு மட்டுமே தெரியும்.இதே போல் காது கேளாதவர், வாய் பேச இயலாதவர்கள் மற்றும் மூளை வளர்ச்சி குன்றிய மாணவர்கள் என அனைத்து விதமான குறைகளையுடைய மாணவர்களுக்கு எந்த மாதிரியான முறையில் பயிற்சியளிக்க வேண்டும் என்று இது போன்ற சிறப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு முறைப்படி கற்று தேர்ந்திருப்பர். எனவே கலைபயில் தெளிவு என்பது இவர்களைப் போன்ற ஆசிரியர்களைப் பொருத்தவரை மிகவும் முக்கியமானது.

**"தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்**
**பருவம் முயற்சி அளவிற் பயத்தலும்**
**மருவிய நன்னில மாண்பா கும்மே"**

ஆசிரியர் என்பவர் தாயைப் போன்றவர் எனவே அவர் அறிவால், அன்பால்,கருணையால்,பண்பால்,பழக்கத்தால், பொறுமையால் எனப் பலவற்றில் சிறந்து விளங்குபவராக இருக்க வேண்டும் . மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு பயிற்சியளிக்கும் ஆசிரியருக்கு இப்பண்புகள் எல்லாம் கூடுதலாக இருத்தல் நன்று. ஏனென்றால் கண்டு,வேட்டு உணராதவர்களுக்கு கற்பதில் பயம் என்பது கண்டிப்பாக இருக்கும். அது அவர்களுக்கு புரிவதற்கு சில காலதாமதங்கள் ஏற்படலாம். ஆனால் புரிந்து மனதில் ஒருதரம் பதிந்துவிட்டால்

அது அழியாததாகிவிடுகிறது. எனவே ஆசிரியர் பொறுமையும், அன்பும் நிறைவராக இந்த இடத்தில் செயல்படுவது மிகவும் முக்கியப் பண்பாக இருக்கிறது.

**"ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்**
**மெய்க்கரு நிலையும் மிகும் நிறை கோற்கே"**

மேலும் மாணவர்களுக்கு ஏதேனும் ஐயம் எழுந்தால் அதனை முறைப்படி பொறுமையுடன் எடுத்து விளக்கிப் புரிய வைப்பதும் ஒரு சிறந்த ஆசிரியரின் பணியாகும். எடுத்துக்காட்டாக "நிறங்களின் உலகத்தில்" சேரா என்னும் கணக்கு டிச்சர் பார்வையற்ற மாணவர்களுக்கு கணக்கு சொல்லிக் கொடுப்பார்.

**"கூட்டல், கழித்தல்,பெருக்கல்,வகுத்தல் என்ற வகைப்பாடுகளை**
**விளக்கிக் கணக்குச் சொல்லித்தந்தார் சேந்தா டிச்சர்""(நிறங்களின் உலகம் :159)**

**"கூட்டலின் சுருக்கம பெருக்கல் என்றால்**
**கழித்தலின் சுருக்கம் வகுத்தல்""(நிறங்களின் உலகம்:159)**

**"பத்து பெருக்கல் ஐந்து என்றால் பத்தை ஐந்துமுறை கூட்ட வேண்டும் என்று அர்த்தம். பத்து வகுத்தல் ஐந்து. பத்திலிருந்து ஐந்தை எத்தனைமுறை கழிக்க முடியுமோ அதுதான் விடை"(நிறங்களின் உலகம்:159)**

இதுபோன்ற அடிப்படை கணக்குகளை மாணவர்களின் மனதில் பதியும் வண்ணமாக பாடம் நடத்தும் ஆசிரியை இவர். அதேபோல் மாணவர்களுக்கு ஒவ்வொரு வகுப்பிலும் ஏதேனும் ஒரு நல்ல கருத்துகளை தெரிந்துக் கொள்ள வேண்டும். அது அவர்களின் வாழ்க்கையினை ஏதேனும் ஒரு வகையில் சூழ்நிலையினை மாற்ற பயன்படலாம் என்று ஒரு நல்ல சிந்தனை கதைகளை கூறும் நல்லியல்பு உடையவர் சேரா டிச்சர். தனது வகுப்பினை மட்டும் எடுத்துக் கொண்டு போய்விட்டால் போதும் என்றில்லாமல் மாணவர்களை நல்வழி படுத்தி ஊக்கப்படுத்துவதிலும் சிறந்து விளங்கினார்.

**"இப்போ பாண்டி சொல்லுவாம் பாரு" என்று எனக்கு முன்னுரிமை தந்து புகழ்ந்தார். படிப்பின் மீது ஆர்வமும் நிறையத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற உந்துதலும் உண்டாயின".(நிறங்களின் உலகம்:108)**

**"சேரா டிச்சர் அவ்வப்போது கதைகள் சொல்லி எங்களை குஷிப்படுத்தினார்கள்.அவர்கள் வகுப்புக்குள் நுழைத்தாலே கலகலப்பு அதிகரிக்கும்"(நிறங்களின் உலகம்:131)**

ஒரு நல்லாசிரியருக்கு மிகவும் முக்கியமானது மாணவர்களை கவர்த்தல் அதனை அவர் சரியாக செய்துவிட்டாலே பாதி வெற்றி. பின் தானக மாணவர்களுக்கு பாடத்தின் மீதும் ஈர்ப்பு வந்துவிடும். அதனையே சேரா டிச்சரும் சிறப்பான செய்துள்ளார். எனவே ஒரு ஆசிரியர் என்பவர் கலைபயில் தெளிவுடன் மென்னையும் நல்ல உறவுமுறையுடையவராய் இருத்தல் வேண்டும் என்பது புரிகிறது.

மேலும் நல்வழிபடுத்துதல் என்பது ஆசிரியர் மிக முக்கியமான குணமாகக் கருதப்படுகிறது.தவறு செய்யும் மாணவர்களை மட்டுமே திருத்துவது நல்வழிபடுத்தலன்று. மாணவர்கள் திக்கு தெரியாமல் தவிக்கும் சமயங்களில் நல்திசையில் ஆற்றுப்படுத்துவதும் நல்ல ஆசிரியரின் பணியாகும். அதற்கு சான்றாக "நிறங்களின் உலகம்" என்ற புதினத்தில் பாண்டி என்ற சிறுவனுக்கு பாதியில் பார்வையிழக்கவே அவனுடைய கல்வி பாதியிலேயே நிறுத்தப்படுகிறது. ஆனால் அவனுக்கு கல்வி கற்க வேண்டும் என்பது அலாதி பிரியமாய் இருக்கவே அவனுடைய ஆசிரியரிடம்,"என்னால் காணத்தான் முடியாது கேட்க இயலும்" நான் செவி வழியாக பயின்றுக்கொள்கிறேன் என்கிறான். அதற்கு ஆசிரியர்

**"ஒன்னய சேத்துக்கிறதுக்கு சட்டத்துல எடமில்ல;நான் ஒரு வழி சொல்றேன்"**

**"குருடர் பள்ளி பற்றிச் சொன்னார். சென்னையில் இருக்கிறது.படிப்பு சாப்பாடெல்லாம் இலவசம்; படிப்பு முடிந்தும் உடனடியாக வேலை;ஆபரேஷன் செய்து பார்வை கிடைக்கவும் ஏற்பாடு செய்வார்கள்"(நிறங்களின் உலகம்:84)**

இவ்வாறு நன்றாக படித்து முன்னேற நினைக்கும் பாண்டிக்கு ஆசிரியர் நல்வழி செய்து அவரின் பணியை சிறப்பு செய்கிறார். மேலும் ஒரு ஆசிரியர் என்றால் வகுப்புக்கு சென்று வெறும் புத்தகத்தில் உள்ள பாடங்களை மட்டும் நடத்திவிட்டு அதனை மாணவர்களின் மண்டையினுள் புகுத்துவது மட்டும் பணியல்ல. நல்ல கருத்துக்களை மனதில் விதைப்பதும்தான் ஆசிரியரின் பணி,

**"தேவைக்கு அதிகமான செல்லச் சேகரிப்பு சைத்தானைக்**
**கூப்பிட்டு வீட்டுக்குள் குடியேற்றுவதற்குச் சமம்"(நிறங்களின் உலகம்:158)**

அதனை சேரா டிச்சர் சிறப்பாகவே செய்தார்.அவர் கணக்கு எடுப்பார் அதனால் அதனை மட்டும் நடத்திவிட்டு செல்லலாம். ஆனால் அதனுடன் சேர்ந்து சில தத்துவர் கதைகளையும் சொல்லி மாணவர்களின் சிந்தனையைத் தூண்டிவிட்டு அவர்களை தாமகாவே யோசிக்கும்படி செய்வார். இது போன்ற முக்கியக் குணங்களே ஒரு ஆசிரியரை சிறந்தவராக மாற்ற உதவுகிறது.

**வாசிப்புமுறை:**

பரந்துபட்ட இந்த உலகில் புதிய நல்ல செய்திகளை ஒருவன் எவ்வாறு தெரிந்துக்கொள்ள இயலும். பொது அறிவினையும் பொதுவாக அறிவினையும் ஒருவன் எப்படி வளர்த்து கொள்ள முடியும். இவைகளுக்கெல்லாம் ஒரே வழி வாசிப்புத்தான். வாசிப்பே மனிதனை முழுமையாக்குகிறது. எனவே வாசிப்பு என்பது மனித வாழ்வில் இன்றியமையாத ஒன்றாகும். **"நூலளவு ஆகுமாம் நுண்ணறிவு"** என்ற ஔவையின் வரிகளில் ஒருவன் எந்த அளவுக்கு வாசிக்கிறானோ அந்த அளவுக்கு அவன் அறிவினை வளர்த்துக் கொள்கிறான் என்றார். மேலும் ஒருவன் புத்தக அறிவினை மட்டும் பெற்றுக் கொண்டால் மட்டும் போதுமா, என்றால் இல்லை அதனை நடைமுறை வாழ்க்கையில் பொருத்தி காணும் அறிவும் வேண்டும். பல்வேறு

புதிய செய்திகளையும் வாழ்க்கையின் அனுபவங்களையும் நமக்கு கற்றுத்தரும் கருவியாக இருப்பது வாசிப்பு ஆகும். மேலும் வாசிப்பு ஒன்றதான் ஒருவனின் கற்பனை ஆற்றலையும் படைப்பாற்றலையும் தூண்டும். சக்தி வாய்ந்தது.**"ஒரு நல்ல நூல் ஒரு நல்ல நண்பனுக்கு ஒப்பானது"** என்ற வரிகளுக்கு ஏற்ப ஒரு நல்ல சிறந்த நண்பனாவதைவிட சிறந்த நண்பனால் நல்ல நூல்களை வாசிக்கக் கிடைத்தால் எப்பேற்பட்ட மனிதனும் சிறந்தவனாவன். அதனை "நிறங்களின் உலகில்" தேனீ சிருடையான்

**"பத்மநாதன் எனக்கு மிகப்பெரிய ஆசிரியனாக இருந்தான்"(நிறங்களின் உலகம்:127)**

**"பத்மநாதன் புள்ளி சொல்லித்தந்தான். பிரைல் எழுத்துக்கள் இரைந்து கிடப்பவை அல்ல; அடுக்கடுக்காகவும் வரிசையாகவும் அமைந்திருக்கும் எனச் சொல்லி என் பயத்தைப் போக்கினான்"(நிறங்களின் உலகம்:118)**

வாசிப்புக்கு மூலதனம் எழுத்துக்களை அறிதலே ஆகும். நாம் அனைத்து எழுத்துக்களையும் கண்ணால் கண்டு எழுத்துக்களையும் கண்ணால் கண்டு எழுத்தி அதனை மனனம் செய்து பின்னர் வாசிப்பிற்கு பயன்படுத்திக் கொள்கிறோன். ஆனால் பார்வையற்றவர்கள் அதனை முதலில் காணாமல் எழுத்துக்களை உணர்ந்து கற்பர். அவ்வாறு எழுத்துக்களை அறிவதற்கு ஆசிரியர் வேண்டும் என்றில்லை சிறந்த நண்பர் இருந்தாலே போதும் என்று பத்மநாபன் நமக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார். தானறிந்த எழுத்துக்களை பாண்டிக்கும் கற்றுக்கொடுத்து அவன் பயந்த சமயங்களில் **"நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்"** என்ற ஆபிரகாம் லிங்களின் வரிகளுக்கு ஏற்ப பாண்டியை ஊக்கப்படுத்தி எழுத்துக்களை கற்கவைத்து சில பிரெயில் புத்தகங்களையும் கொடுத்து படிக்கவைக்கிறான். இங்கு நல்ல நண்பன் சிறந்த ஆசானாக பரிமாற்றமடைவதனைக் காணமுடிகிறது.

மேலும் அவனே பாண்டிக்கு பிரெயிலி முறையினைக் கற்றும் கொடுத்து வாசிக்க பழக்குகிறான். பாண்டி துவண்ட போதெல்லாம் அவனை ஊக்கப்படுத்தியும் கடிந்து கொண்டும் பாண்டியை வாசிக்க தயாராக்கினான்.**'இடித்துரைத்தல்'** நண்பனுக்கு அழகு. இதற்கு சான்றாக பாண்டி பிரெயிலி கற்க தொடங்கிய போது அவனுக்கு மிகுந்து பயம் உண்டாகி வீட்டுக்கே போய்விடலாம் என்று எண்ணத் தொடங்கிவிட்டான். அப்போது பத்பநாதன்.

**"சோமாறி,திட்டினான் பத்மநாதன். வீட்டுக்குப் போயி என்னா செய்வ;அப்பா அம்மா இல்லாங்காட்டிப் பிச்சை எடுக்கக்கூட லாயக்குப்படமாட்ட; இங்கன்னா படிச்சு முடிச்சு வேலக்கிப் போகலாம்; குடும்பத்தவே ஒக்காரவச்சு கஞ்சி ஊத்தலாம். "(நிறங்களின் உலகம்:114)**

என்று பாண்டியை கடிந்துக் கொண்டு அவனுக்கு நல்லவைகளைப் புகட்டினான்.இப்படி

 ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September2024

வாழ்க்கையின் புரிதல்களை வாசிப்பு என்ற ஒன்றினால் மட்டுமே தர இயலும்.

வாழ்க்கையின் புரிதல்களை மட்டுமல்லாது நிறைய செய்திகளை படிக்காத மாணவர்களும் தெரித்துக் கொள்ள வாசிப்பு பயன்பட்டது என்பதனை,

**"பாண்டுரங்கனுக்கு எவ்வளவு விஷயங்கள் தெரிக்கின்றன;அவர் ஒரு தகவல் களஞ்சியம்.""எப்படி பாண்டி இதெல்லாம் தெரிஞ்சுக்க முடியுது?","வாசிப்புத்தான்"என்றார் எளிதாக"(நிறங்களின் உலகம்:211)**

பாண்டுரங்கன் தொழிற்பயிற்சி மாணவர் தனது இருபதாவது வயதில்தான் பார்வையற்றோர் பள்ளிக்கூடம் இருக்கின்றதை அறிந்தார்.வயதை கடந்து இப்பள்ளியில் சேர்ந்தால்,இங்கு தொழிற்கல்வி கற்றுக்கொண்டே,சக மாணவர்களிடம் பிரைலும் ஆங்கிலுமும் கற்றுக் கொண்டு நிறைய பிரைல் புத்தகங்களை வாசித்தும் தனது உலக அறிவினை வளர்த்துக் கொண்டார்.

இப்படி இவர்களைப் போன்ற பார்வையற்ற மாணவர்களும் வாசிக்கும் வண்ணம் உருவாக்கப்பட்டு எழுத்தே பிரெயிலி ஆகும். ஆனால் அதனை லூயி பிரெஞ்சில் மட்டுமே கண்டுப்பிடித்தவர். அவருக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாது. எனவே இம்முறையை பயன்படுத்தி 1951-ல் **"பாரதி புடையெழுத்து"** என்ற குழு ஆங்கில எழுத்தின் ஒலிப்புமுறையினை தமிழோடு பொருத்தி அதன்மூலம் தமிழுக்கும் பிற மொழிகளுக்கும் எழுத்தினைக் கண்டறிந்தனர். எடுத்துக்காட்டாக 'க' என்றால் 'ka' என்ற எழுத்தின் இணைப்பு ஓசையினைக் கொண்டு 'k' மற்றும் 'a'-க்கு பயன்படுத்தப்படும் புள்ளிகளைக் கொண்டு எழுதினர்.ஆனால் தமிழில் வாசிப்பதற்கும் ஒரு சவால் இருந்தது. அதுதான் மெய்யெழுத்து.ஆங்கிலத்திலோ,பிரெஞ்சிலோ புள்ளி வைத்த எழுத்துக்கள் இல்லை. என்வே அவர்கள் மெய்யெழுத்தினை அறிந்து கொள்ள அதனை எழுதுவதற்கு முன்பு முதல் ஸ்பேஸில் நாலாம் புள்ளி வைத்து அடுத்த ஸ்பேஸில் என்ன எழுத்தோ அதற்கான புள்ளியினை வைக்க வேண்டும். இவ்வாறு வெறும் அறுபத்தி நான்கு குறியீடுகளை வைத்துக் கொண்டு தமிழில் எழுத்துக்களை முழுமையாக கண்டறிந்தனர்.இதன்மூலம் இன்று எண்ணற்ற பார்வையற்ற மாணவர்கள் நிறைய பிரையில் புத்தகங்களை வாசிக்கவும் எழுதவும் முடிந்தது.

பிரெயில் மட்டுமே அவர்களின் வாசிப்பார் இருக்கின்றதா என்றால் இல்லை.மேலும் சில கருவிகளும் இவர்களின் வாசிப்பதற்கு உதவுகின்றது.அதில் ஒன்றுதான் ஒலி நாடாவில் ஒலிப்பதிவு செய்தல் பதிவு செய்யப்பட்ட ஒலிப்பேழைகள் ஓரிடத்தில் தொகுத்து ஒலி நூலகம் அமைத்து அது ஆரம்பப் படிகளைக் கொண்ட பார்வையற்றோரின் களமானது. இன்று கணினியுகமானதால் கணினி வழியாக மின் புத்தங்கள் வாசிப்பதற்கு O.C.R எனப்படும் எழுத்துணரிகள் மூலமாக புத்தகங்களை வாசிக்க முற்படுகின்றனர். அதுமட்டுமல்லாத சில தொண்டர்கள் ஆர்வத்தோடு முன்வந்து இவர்களைப் போன்ற பார்வையற்ற மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுகின்றனர் .திருமதி.அன்னம் நாராயணன் என்பவர்

 ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September2024

பார்வையற்றோர்களுக்குகென முதன்முதலில் வாசிப்பாளர் சங்கத்தினைத் தோற்றுவித்தார்.ஞாயிற்றுக்கிழமைகளிலும்,திங்கட் கிழமைகளிலும் "தர்ஷினி" மற்றும் சென்னை வள்ளுவர் கோட்டம் பத்மா சேஷாத்ரி பள்ளியில் நடைபெறும் வாசிப்பு மையமும்,இதற்கு சான்றுகளாகும் (289).இது போன்ற எண்ணற்ற வாசிப்பு மையங்கள் பார்வையற்ற மாணவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றுவதாக அமைகின்றன.மேலும் மாணவர்களின் பொருள் தேவைகளைக்கூட இது போன்ற வாசிப்பு மையங்கள் நிறைவேற்றுவதுண்டு.ஆனால் இந்த வாசிப்பு மையங்களுக்கு செல்ல கூடுதல் நேரம் பயணிக்க வேண்டும்.நேரடியாக வர இயலாதவர்கள் கணினியின் மூலம் வாசித்துக் கொள்கின்றன. கணினி வாசிப்பு என்பது முற்றிலுமாக மாறுபட்ட ஒன்றாகும்.இதில் நாம் ஏற்கனவே பதிவிறக்கம் செய்யப்பட்ட செய்திகளை வாசிப்பது ஆகும். இதன்மூலம் புதிய செய்திகளை நம்மால் தெரிந்துக் கொள்ள இயலாது.இதனை நாம் நேரடி வாசிப்பின் மூலமே நமக்கு புதிய செய்திகளும் அனுபவங்களும் கிடைக்கும். அதுமட்டுமின்றி நாம் வாசிக்கும் போது ஏற்படும் ஐயங்களை நாம் உடனுக்குடன் நேரடி வாசிப்பில் தெரிந்துக் கொள்ளலாம். நமக்கு ஐயங்களினால் ஏற்படும் சோர்வும் பயமும் கூட வாசிப்பாளர்களின் மூலம் தன்னம்பிக்கை பெற்று தீரும். இவையெல்லாம் கணினி வாசிப்பில் நிகழ வாய்ப்பில்லை.ஆனால் இன்று 20-களில் கணினி வாசிப்புத்தான் பார்வையற்றவர்களிடம் பல்கி பெருகியுள்ளது. உடனுக்குடன் நமது ஐயங்களை வலைத்தளத்தின் மூலம் தெரிந்து பிறரின் துணையில்லாமலும் அவர்களால் வாசித்து ஐயங்களையும் தீர்த்துக் கொள்கின்றனர். அதுமட்டுமின்றி பதிவு செய்யும் பல கருவிகளின் மூலமும் பார்வைமாற்றுத்திறனாளி மாணவர்கள் பதிவு செய்து வாசித்துக் கொண்டும் கணினியின் மூலம் தட்டச்சு செய்து கொண்டும் இருக்கின்றனர்.

**முடிவுரை**

சமுகத்தில் பார்வைமாற்றுத்திறனாளிகளின் போராட்டமானது 90-களில் தொடங்கி 1955 களில் முடிவுக்கு வந்தது என்றாலும் அவர்களுக்கான முன்னேற நிலையானது உரிமை கிடைத்த வேகத்தைவிட குறைந்தே காணப்படுகின்றது.

பாரத நாட்டின் உயரிய பணியான குடிமைப்பணி முதல் அரசின் கடைநிலை ஊழியர்கள் வரை மட்டும் அல்லாமல் நவீனத்தொழில்நுட்ப அறிவினைப் பெற்று பல பொதுத்துறை நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் மற்றவர்களுக்கு சவால் விடும் வகையில் பணி செய்து வருகின்றனர். அனைத்துத் துறையிலும் பார்வையற்றோர் தடம் பதித்த போதிலும் இன்னும் அவர்களுக்கான அங்கீகாரம், சம உரிமை, இட ஒதுக்கீடு போன்ற உரிமைகளுக்காகப் போராடும் நிலையிலே இருக்கின்றனர்.

**மேற்கோள்கள்**

1. தேனி சீருடையான்
நிறங்களின் உலகம்
அகரம்
மனை எண் :1,நிர்மலா நகர்
தஞ்சாவூர் - 613007
முதல் பதிப்பு - டிசம்பர் 2008
இரண்டாம் பதிப்பு - 2015.

2.தேனி சீருடையான்
சிறகுகள் முறியவில்லை
அகரம்
மனை எண் :1,நிர்மலா நகர்
தஞ்சாவூர் - 613007
முதல் பதிப்பு - ஏப்ரல் 2013.
3. எல்.கே. பாஸ்கல் கில்பர்ட்,
சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்
தமிழ் வெளியீட்டுக் கழகம்,
சென்னை -1964.

4.எஸ். ராமகிருஷ்ணன் குழு,
க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி
முதற் பதிப்பு -1992,
இரண்டாம் பதிப்பு - 2008,
மூன்றாம் பதிப்பு - 2020.

5. பார்வையற்றோர் தன்மேம்பாடும் எதிர்நோக்கும் சவால்களும்
ஆசிரியர் குழு
ஏ.கே.எஸ். புக்ஸ் வேர்ல்டு,
அறை எண்.31,மனோகர் மேன்சன்,
சென்னை -600017.
பதிப்பு ஆண்டு : 2018

6.திருக்குறள்
பதிப்பக ஆசிரியர் குழு
லியோ புக் டிஸ்டிரிபுயூட்டர்ஸ்
528,எஸ்.எஸ். ஆர். பில்டிங்,
பூந்தமல்லி,
சென்னை - 6000106.

7.புலியூர்க்கேசிகன்
புறநானூறு மூலமும் உறையும்
சாரதா பதிப்பகம்
ஜி-4 , சாந்தி அடுக்ககம்,
சென்னை - 600014.
முதற் பதிப்பு :டிசம்பர் 2010.